# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**Vol. II  Issue 4  July 2012**


இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் | 2 |
| திருமணத்தின் சரியான பக்கமும், தவறான பக்கமும் | 16 |
| இம்மாதச் செய்தி | 18 |
| சாவித்ரி | 19 |
| யோக வாழ்க்கை விளக்கம் VI | 21 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 26 |
| லைப் டிவைன் - கருத்து | 28 |
| அஜெண்டா | 30 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 32 |
| அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் | 33 |
| சொல்பவர் சொன்னதால் | 40 |
| Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 1) | 46 |
| முன்னேற்றம் என்பது புதிய சிந்தனை | 55 |
| ஸ்ரீ அரவிந்தரும், மரபும் | 63 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.


வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-


## ஜீவியத்தின் ஓசை

**பிரம்மத்தை இன்னது என்று வர்ணிக்க முடியாத காரணத்தினால் அதனால் எல்லாவற்றையும் உண்டு பண்ண முடிகிறது.**

**யானையைக் கேட்டுப் பெற்றாலும் பூனையைத் தர மனம் வாராது.**

**ஆலமரத்தை எடுத்துப் போனாலும் அதன் சருகும் தர மனம் வாராது.**

**எப்படிச் சாதித்தனர், ஏன் சாதிக்க முடிந்தது என்ற ஞானம் எதையும் சாதிக்கும்.**

**உதவியை விட உதவி செய்யும் மனப்பான்மை அதிகம் சந்தோஷம் தரும்.**

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XXIII. The Double Soul In Man

That term is something in us. *Page 220*
It has a special sense for us. *Para 4*
We call it soul.
It is the psychic principle.
It is not life or mind.
It is much less the body.
There is an essence of mind, life and body.
There is a refined purity of being.
It is the peculiar delight of the mind, life and body.
It is a delight of self, to light, to love, to joy and beauty.
The psychic holds the opening and flowering of these.
In fact there is a double soul in us.
It is the psychic.



## 23. மனிதனுள் இரட்டை ஆத்மா

அந்த விஷயம் நம்முள் உள்ள ஒன்று.
அதற்கு விசேஷ பொருள் உண்டு.
நாம் அதை ஆத்மா என்கிறோம்.
அது சைத்திய புருஷ தத்துவம்.
அது மனமோ வாழ்வோயில்லை.
அத்துடன் உடல் சம்பந்தப்படாது.
மனம், வாழ்வு, உடலுக்குச் சாரமுண்டு.
ஜீவனுடைய மிருதுவான தூய்மையுண்டு.
கரணங்களின் விசேஷ ஆனந்தம் அது.
அது ஆத்மாவுக்கு அழகு, சந்தோஷம், அன்பு, ஜோதி தரவல்லது.
சைத்திய புருஷன் இந்த அம்சங்கள் மலர்வதைப் பெறத் தயாராக உள்ளது.
உண்மையில் நம்மில் இரு ஆத்மாக்கள் உள்ளன.
இதற்குச் சைத்திய புருஷன் எனப் பெயர்.

It follows the rule of every other cosmic principle in us.
Therefore the soul too is double.
We have two minds.
One is the surface mind.
It is our expressed evolutionary ego.
It is the superficial mentality.
It is created by us in our emergence out of Matter.
Another is the subliminal mind.
It is not hampered by our actual mental life.
Our mind has strict limitation.
It is something large.
It is powerful and luminous.
It is our true mental being.
It is behind that superficial mental personality.
We mistake that to be ourselves.
So also, we have two lives.
One is outer.
It is involved in the physical body.
It is bound by its past evolution in Matter.

It lives, was born and will die.
The other is a subliminal force of life.
It is not cabined between the narrow boundaries of our physical birth and death.
But it is our true vital being.
It is behind the form of living.



இதர பிரபஞ்ச தத்துவங்களுடைய சட்டத்தை ஆத்மாவும் பெற்றுள்ளது.
எனவே ஆத்மாவும் இரண்டாக இருக்கிறது.
நமக்கு இரு மனம் உண்டு.
ஒன்று மேல் மனம்.
அது பரிணாமத்தில் வெளிவரும் அகங்காரம்.
இது மேலெழுந்தவாரியான மனநிலை.
ஜடத்திலிருந்து வெளிப்படும் பொழுது நாம் சிருஷ்டித்தது அது.
அடுத்தது அடி மனம்.
அடி மனம் நம் மனவாழ்வால் பாதிக்கப்படவில்லை.
நம் மனம் கடுமையான வரையறைக்குட்பட்டது.
அடிமனம் விசாலமானது.
அது ஜோதிமயமான சக்தி வாய்ந்தது.
அதுவே நம் உண்மையான மனம் - மனத்தின் ஜீவன்.
அடிமனம் மேலெழுந்து மனத்தின் பின் உள்ளது.
நாம் அதைத் தவறாக நாம் எனக் கருதுகிறோம்.
அதே போல் நமக்கு இரு வாழ்வுண்டு.
ஒன்று புறத்திற்குரியது.
அது உடலுள் கலந்து உறைகிறது.
கடந்த கால பரிணாமத்தால் - ஜடத்துள் - அது கட்டுப்படுத்தப்பட்டது.
அது பிறந்து, இருந்து, இறப்பது.
அடுத்து அடிமன வாழ்வின் சக்தி.
அது உடலின் பிறப்பு, இறப்பிடையே உள்ள குறுகிய சிறைக்குட்பட்டதில்லை.
அது உண்மையில் நம் வாழ்வின் ஜீவன்.
அது வாழ்வின் ரூபத்தின் பின்னுள்ளது.

We ignorantly mistake it for our real existence.

There is our matter of being.
Even there, there is this duality.
There is a subtler material existence.
It is behind our body.
It provides the substance.
It is not only to our physical sheath.
It does so for our vital, mental sheaths.
Therefore it is our real substance.
It supports this physical form.
Our belief is erroneous.
We imagine it to be the whole body of our spirit.

So too, we have this double psychic entity in us.
One is the surface soul – desire soul.
It works in our vital cravings.
It works in our emotions, aesthetic faculty.
It is there in our mental seeking for power.
Even in seeking knowledge and happiness it is there.

There is a subliminal psychic entity.
It is a pure power of light, love and joy.
It is a refined essence of being.
It is our true soul.
It is behind our outer form of psychic existence.
We often dignify it by that name.



தவறுதலாக நாம் அதை நம் உண்மையான வாழ்வாகக் கொள்கிறோம்.
நம் ஜீவனின் ஜடப் பகுதியுண்டு.
அங்கும் இந்த இரு நிலைகள் உள்ளன.
சூட்சுமமான ஜட வாழ்வுண்டு.
அது உடலின் பின்னுள்ளது.
அது பொருள் தருகிறது.
அது உடலுக்கு மட்டுமல்ல.
அது பிராண, மன கோசங்களுக்கும் அளிக்க வல்லது.
எனவே அது நம் உண்மையான பொருள்.
அது உடலெனும் உருவத்தை ஆதரிக்கிறது.
நம் எண்ணம் தவறானது.
அதைத் தவறாக நம் முழு ஆத்மாவின் உடலாகக் கொள்கிறோம்.
அதே போல் நம்முள் இவ்விரு ஆத்மாக்கள் உள்ளன.
மேல் மனத்தின் ஆசையை நாம் ஆத்மாவாகக் கொள்கிறோம்.
நம் ஆசையின் அவதிகளில் அது வெளிப்படுகிறது.
நம் உணர்ச்சிகளிலும் அழகுணர்விலும் அது செயல்படுகிறது.
மனம் அதிகாரத்தை நாடுவதிலும் அது உள்ளது.
மனம் அறிவையும் சந்தோஷத்தையும் நாடுவதிலும் அது உள்ளது.
அடி மனத்திற்குரிய சைத்திய புருஷனுண்டு.
அது ஒளி, அன்பு, சந்தோஷத்திற்குரியது.
அது ஜீவனின் புனித சாரம்.
அது நம் உண்மையான ஆத்மா.
புற ஆன்மாவின் பின்னுள்ளது அது.
புற ஆன்மாவை நாம் ஆன்மா என்று உயர்வாகக் கூறுகிறோம்.

This larger purer psychic entity comes to the surface.
We then say Man has a soul.
Sometimes it is absent.
It is absent in his outer psychic life.
We then say he has no soul.

Our egoistic existence is small. ***Page 221***
They are the form of our being. ***Para 5***
They are external.
We have a larger true individuality.
It is the subliminal.
They are the formations of the larger part of us.
They are the concealed part of our being.
There our individuality is close to our universality.
It touches it.
It is in constant relation with it.
It is its commerce.
The subliminal mind in us is open to the universal.
There is the universal knowledge.
It is of the cosmic Mind.
We have a subliminal life.
It receives from the universal force.
It is of the cosmic Life.
There is the subliminal physicality in us.
There is the universal force-formation.
It is of cosmic Matter.



இந்தப் புனித விசாலமான சைத்திய புருஷன் மேலே வரும்.

அப்பொழுது மனிதனுக்கு ஆத்மாவுண்டு எனக் கூறுகிறோம்.
சில சமயம் அது இருக்காது.
அவன் புற ஆன்மீக வாழ்வில் அது சில சமயமிருக்காது.
அப்பொழுது அவனுக்கு ஆத்மா இல்லை என்கிறோம்.

அகந்தை வாழ்வு சிறியது.
அவை நம் ஜீவனின் உருவங்கள்.
அவை புறத்திற்குரியவை.
பெரிய உண்மையான ஜீவன் உண்டு.
அவை அடிமனத்திற்குரியவை.
பெரிய ஜீவன் உருவாக்கியவை அவை.
அவை மறைந்துள்ள நம் ஜீவனின் பகுதிகள்.
அங்கு நம் ஜீவன் பிரபஞ்சத்தை ஒட்டியுள்ளது.
நம் ஜீவன் பிரபஞ்சத்தைத் தொடுகிறது.
அத்துடன் தொடர்ந்த தொடர்புள்ளது.
அதுவே அதன் தொழில்.
அடிமனம் பிரபஞ்சத்திலிருந்து பெறக் கூடியது.
பிரபஞ்சத்தில் ஞானமுண்டு.
அது பிரபஞ்ச மனத்திற்குரியது.
அடிமன வாழ்வு நமக்குண்டு.
அது பிரபஞ்ச சக்தியைப் பெறுகிறது.
அது பிரபஞ்ச வாழ்வுக்குரியது.
அடிமன உடல் வாழ்வுண்டு.
பிரபஞ்ச சக்தி உருவாகிறது.
அது பிரபஞ்ச ஜடம்.

Thick walls divide from these the surface mind, life and body.
Nature has to pierce them.
It is of much trouble.
It is imperfect.
It is by skillful-clumsy physical devices.

These are there in the subliminal.
It is a rarefied medium.
It is of separation and communication.
So too the subliminal soul in us.
It is open to the universal delight.
The cosmic soul takes in its own existence.
And so in the existence of the myriad soul.
They represent it.
They do so in the operation of mind, life and matter.
Nature lends herself to their play in them.
It is so in development.
The surface soul is shut off from this cosmic delight.
It is by egoistic walls of thickness.
There have been gates of penetration.
They enter through them.
The touches of divine cosmic Delight become dwarfed.
It is distorted.
They have to come in masked as their own opposites.



மேல்மன வாழ்வு, உடலை அடிமனத்திலிருந்து தடித்த சுவர்கள் பிரிக்கின்றன.
இயற்கை அவற்றை ஊடுருவ வேண்டும்.
அது தொந்தரவானது.
ஊடுருவுவது அரைகுறையாகிறது.
திறமையும், குழப்பமும் கலந்த ஜட சாதனங்களால் அது நடைபெறுகிறது.
அவை அடிமனத்திலுள்ளன.
அது நுட்பமான இடைவெளி.
அது பிரிக்கும், தொடர்பு கொள்ளும்.
அடிமன ஆத்மா அது போன்றது.
அது பிரபஞ்ச ஆனந்தம் பெற வல்லது.
பிரபஞ்ச ஆத்மா அதைத் தன் பகுதியாகக் கொண்டுள்ளது.
இலட்சக்கணக்கான ஆத்மாக்களின் வாழ்வும் அப்படியே.
இவ்வாத்மாக்கள் பிரபஞ்சப் பிரதிநிதிகள்.
மனம், வாழ்வு, ஜடச் செயல்களிலும் அப்படியே.
அவற்றுள் பிரகிருதியின் லீலை செயல்படுகிறது.
வளர்ச்சியிலும் அதுவே சட்டம்.
இப்பிரபஞ்ச ஆனந்தம் மேல்மன ஆத்மாவுக்கில்லை.

அகந்தையின் கனத்த சுவர்கள் பிரிக்கின்றன.
அவை ஊடுருவும் கதவுகள்.
அச்சுவர் மூலம் நுழைகின்றன.
தெய்வீக பிரபஞ்ச ஆனந்த ஸ்பர்சம் சுருங்கும்.

அது சின்னாபின்னமாகிறது.
அவை முகமூடி அணிந்து எதிரானவையாக வர வேண்டும்.

This is the surface or desire soul. ***Page 221***
It follows there is no true soul here. ***Para 6***
But this is a psychic deformation.
Or, it is a wrong reception of the touch of things.
The world has a malady.
It is the individual cannot find his real soul.
Man lives in his real soul.
He cannot meet in his embrace of things outward.

This is the root-cause of this malady.
Man seeks to find various essences.
It is the essence of being.
It is the essence of power.
It is the essence of conscious-existence.
It is the essence of delight.
He gets a crowd of impressions.
They are contradictory.
He may find that essence.
Then he would find the one universal being.
It is a universal power, conscious existence.
It is the universal delight.
Even in this throng of touches and impressions, he would get them.
They appear as contradictions.
It would be reconciled in the unity and harmony of the Truth.
It reaches out to us in these contacts.
At the same time he would find his true soul.



இது மேல்மன ஆன்மா, அல்லது ஆசையின் ஆன்மா.
உண்மையான ஆத்மா இதிலில்லையென்று தெரிகிறது.
இது சைத்திய புருஷன் சிதைந்த நிலை.
விஷயத்தின் ஸ்பர்சத்தை இது விபரீதமாக ஏற்ற நிலை.
உலகம் பெற்ற பெரும் குறையொன்றுண்டு.
மனிதன் தன் உண்மையான ஆத்மாவை அறிய முடிவதில்லை.
மனிதன் தன் உண்மையான ஆத்மாவில் வாழ்கிறான்.
புற விஷயங்களில் அவனால் இவ்வாத்மாவைத் தழுவ முடியவில்லை.
மனிதனுடைய குறைக்கு மூல காரணம் இதுவே.
பல்வேறு மூலங்களின் சாரத்தை மனிதன் நாடுகிறான்.
இதுவே ஜீவனின் மூலம்.
இது அதிகார சக்தியின் மூலம்.
அது தெளிந்த சத்தின் மூலம்.
அது ஆனந்த மூலம்.
பல்வேறு உணர்ச்சி ரூபங்கள் கூட்டமாக வருகின்றன.
அவை முரண்பாடும், பிணக்கும் நிறைந்தவை.
அந்தச் சாரம் அவனுக்குக் கிடைக்கலாம்.
அது ஒரு பிரபஞ்ச ஜீவன்.
அது பிரபஞ்ச சக்தி, தன்னையறியும் சத்.
அது பிரபஞ்ச ஆனந்தம்.
இந்தக் கூட்டமான ஸ்பர்சம், உணர்ச்சி ரூபங்களிடையே அவன் அவற்றைப் பெறுவான்.
அவை பிணக்காகத் தோன்றுகின்றன.
அவை சத்தியத்தின் சுமுகத்தில் முரண்பாட்டை இழந்துவிடும்.

இத்தொடர்பால் அவை நம்மை வந்தடைகின்றன.
அதே சமயம் அவன் தன் உண்மையான ஆத்மாவை அறிவான்.

Through it he will reach his self.
The true soul is the delegate of his Self.
His self and the self of the world are one.
But this cannot do.
There is the egoistic ignorance in the mind.
It is the mind of thought, emotion and sense.
They respond to the touch of things.
It is not by courage.
Not a whole-hearted embrace of the world.
It is according to the touch.
It is by a flux of reachings.
It is by shrinkings.
It is by cautious approaches.
Or by eager rushes.
Or it may be sullen and discontented.
Or panic or angry recoils.
The touch may please or displease.
It may comfort or alarm.
Or satisfy or dissatisfy.
The desire soul wrongly receives the delight.
It is the cause of triple misrepresentation.
Rasa is the delight of things.
We receive the pure essential joy of the being.
It is rendered equally in three terms.
They are pleasure, pain and indifference.

*Contd....*

❋❋❋



அதன் மூலம் அவன் தன் பிரம்மத்தை அடைவான்.
அவனது உண்மையான ஆத்மா அவன் பிரம்மத்தின் பிரதிநிதி.
அவனது பிரம்மமும், உலகத்தின் பிரம்மமும் ஒன்றே.
இது உதவாது.
மனத்தில் அகந்தையின் அறியாமை உள்ளது.
மனம் எண்ணம், உணர்ச்சி, உடலுணர்ச்சியுள்ளது.
அவை விஷய ஸ்பர்சத்தை உணர்கின்றன.
அது தைரியமான செயலல்ல.
உலகை முழுமனதுடன் தழுவும் தைரிய செயலில்லை.
ஸ்பர்சத்தைப் பொறுத்து அமையும் தழுவல் அது.
உலகம் பலவகையாக மனிதனை வந்தடையும்.
மனிதன் அதனின்று விலகிச் சுருங்குவான்.
ஜாக்கிரதையாக அணுகுவான்.
அல்லது ஆர்வமாக ஓடி வருவான்.
அல்லது வெறுப்பும் விரக்தியுமாகவும் வரலாம்.
அல்லது பயந்து கோபமாக ஓடிவிடுவான்.
ஸ்பர்சம் இனிமையாக அல்லது எதிராக இருக்கும்.
அது பயத்தை எழுப்பும் அல்லது சௌகரியம் தரும்.
அது திருப்தியாக அல்லது அதிருப்தியாக இருக்கும்.
ஆசை ஆனந்தத்தைத் தவறாக ஏற்கிறது.
மூவகையான தவற்றுக்கு அதுவே மூலம்.
ரஸம் ஆனந்த சாரம்.
ஜீவனின் சாரமான தூய சந்தோஷம் வருகிறது.
அது மூன்று வகையாக மாறுகிறது.
அவை சந்தோஷம், வலி, பாராமுகம்.

*தொடரும்......*

❋❋❋

# திருமணத்தின் சரியான பக்கமும், தவறான பக்கமும்

ஆங்கில மூலம் திரு. என். அசோகன் அவர்கள்

தமிழாக்கம் திருமதி. விசாலாக்ஷி ராமநாதன் அவர்கள்

| சரியான பக்கம் | தவறான பக்கம் |
|---|---|
| 1. தம்பதியரிடம் இருக்கும் அன்பும், அரவணைப்பும் அவர்களுடைய பிஸிக்கல் வாழ்க்கையையும், உணர்வு மயமான வாழ்க்கையையும் மேலும் மேம்படுத்தும். | 1. அன்பு இல்லாமலும், ஒருவரை ஒருவர் அதிகாரம் செய்யும் முயற்சியிலேயே இருந்தால் அவர்களது வாழ்க்கை இழுபறி போராட்டமாக இருக்கும். |
| 2. பரஸ்பர நல்லெண்ணமும், உதவும் மனப்பான்மையும் இருந்தால் அவர்களது வாழ்நாளும் நீடிக்கும். | 2. பரஸ்பர நல்லெண்ணம் அழிந்து கெட்ட எண்ணமாக மாறினால், அது அவர்களது ஆயுளை குறுக்கவும் செய்யலாம். |
| 3. திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை தன்னை மற்றவருக்கு வழங்குவதற்கும், எல்லோருடன் ஒத்துழைத்து, சுமுகமாக இருப்பதற்கும் ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமையும். | 3. போட்டி மனப்பான்மையாக உறவு மாறினால் அங்கு பரஸ்பரம் பாராட்டுவதற்கு பதிலாக அதிகாரம் செய்யும் மனப்பான்மை மேலோங்கி சுமுகக் குறைவு ஏற்பட்டுவிடும். |
| 4. திருமண உறவில் அடுத்தவர் கண்ணோட்டத்தைப் பாராட்டுவது நம் மனதை விசாலமடையச் செய்யும். | 4. நம்முடைய கண்ணோட்டத்தையே வலியுறுத்தினால், நம் மனம் மேலும் மேலும் குறுகிவிடும். |
| 5. ஒரு மனைவி தன்னுடைய கணவனுக்கு தானே முன்வந்து பணிந்து அவருடைய சொற்படி நடந்தால் அந்த உறவு இனிமையாகவும், சந்தோஷமாகவும் மாறிவிடும். | 5. கணவன் தனக்குப் பணிய வலியுறுத்தி, அதை ஏற்காமல் மனைவி தன் போக்கிலேயே சுதந்திரமாகச் செயல்பட விரும்பினால் இனிமையான இல்லறம் மறைந்து கசப்பு தலைதூக்கும். |
| 6. தம்பதிகளிடம் இருக்கும் பரஸ்பர அன்பு அவர்களுக்கு முக்கியமானதாக இருந்தால் அவர்களது திருமணம் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும். | 6. கணவனுடைய வருமானத்தையோ அல்லது சொத்தையோ கணவனை விட முக்கியமானதாக ஒரு மனைவி கருதினாலும், மனைவியுடைய அன்பைவிட அவளுடைய அழகையோ, அவள் தரும் சுகத்தையோ ஒரு கணவன் முக்கியமாகக் கருதினாலும் அவர்களுடைய இல்வாழ்க்கை துன்பமயமாகிவிடும். |
| 7. இருவருக்கும் விட்டுக் கொடுக்கும் தன்மை இருப்பின், வீட்டையும், அலுவலகத்தையும் சமநிலையுடன் சமாளிப்பதும், குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் சிறந்த கற்றுக் கொள்ளும் அனுபவமாக இருக்கும். | 7. இருவருக்கும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாமல் இருந்து வேலைக்கும் செல்பவராக இருப்பின் வீட்டையும், அலுவலகத்தையும் சமாளித்து, குழந்தைகளையும் கவனிப்பது என்பது ஒரு வேதனைக்குரிய அனுபவமாக மாறிவிடும். |
| 8. மனைவி ஒரு பெரிய கூட்டுக் குடும்பத்தின் மருமகளாக இருந்தால், அவள் நல்ல பண்புள்ளவளாகவும், அனுசரித்து போகின்றவளாகவும் இருந்தால் அக்கூட்டுக் குடும்ப வாழ்க்கை எல்லோருக்கும் மகிழ்ச்சிகரமாக இருக்கும். | 8. அவள் ஒத்துப்போகும் தன்மை அற்றவளாக இருந்து, மாமியாரும் அதிகாரம் செய்பவராகவும் சண்டை போடுபவராகவும் இருந்தால் அக்கூட்டுக் குடும்பத்தில் திருமண வாழ்க்கை எல்லோருக்கும் துன்பமயமாகிவிடும். |
| 9. இருவருடைய சாதனைகளையும் கண்டு இருவரும் சந்தோஷமடைந்தால், அவர்கள் இருவரும் வேலைக்குச் செல்பவராக இருந்தால், அவர்கள் பணியில் அவர்களுக்கு மேன்மேலும் முன்னேற்றம் கிடைக்கும். | 9. கணவன் அலுவலக பணியிலேயே ஆழ்ந்துவிட்டார் என மனைவி நினைத்தாலோ, மனைவி அதிகம் சம்பாதித்தால் தனக்கு அடங்க மாட்டாள் என்று கணவன் கருதினாலோ அவர்களது அலுவலக பணியின் முன்னேற்றத்தில் தடை ஏற்பட்டுவிடும். |
| 10. சிறப்பான பெற்றோராக இருந்தால், குடும்ப வாழ்க்கையில் முன்னேற்றமும், சாதனைகளும் தடங்கலின்றி ஏற்படும். குழந்தைகள் பெற்றோரைவிட அதிகமாக சாதிப்பார்கள். | 10. பெற்றோர் இருவரும் சரியில்லை என்றால், தங்களைவிட பிள்ளைகளின் சாதனை தாழ்ந்துப் போகக் கூடாது என்பதிலும், அவர்களுடைய குறைந்தபட்ச முன்னேற்றத்திற்கே தங்களுடைய அதிகமான நேரத்தையும், சக்தியையும் செலவழிக்க வேண்டி வரும். |

❋❋❋

*இம்மாதச் செய்தி*

## அளவு கடந்து பெருகாத பெரு வாழ்வில்லை.





## P.140 To battle overcome and make one's own

**போராடி வென்று, சொந்த உடைமையாக்கி**

- ☆ சொந்த மகிழ்ச்சியைப் பிறர் சந்தோஷத்தில் கலந்து
- ☆ உடைமையாகவும், உடைமையாக்கவும் எண்ணி
- ☆ உணர்ந்து, அனுபவித்து, வாழ்வதுடன் தன்னையும் பிறர் அனுபவிக்க விழையும்
- ☆ இதுவே அதன் சிறு ஆரம்பமாகும்
- ☆ க்ஷண இன்பம் ஆரம்பித்தவுடன் முடிந்தது
- ☆ அறியாமையின் முத்திரை அவசரமாக அழியும் சின்னம்
- ☆ பழக்கம் பழுதற செல்லிலும் ஊறி
- ☆ இருண்ட தீமை ஆவியாக எழுந்தது
- ☆ நம் செயலையும் கனவையும் பேயெனத் தொடரும்
- ☆ புவியில் வாழ்வு காலூன்றி நிரந்தரமாயிற்று
- ☆ அது பழக்கத்தின் பக்குவம், அல்லது உணர்வின் சட்டம்
- ☆ அஸ்திவாரமின்றி அசைந்து மாறும் நிலையில் மீண்டு வரும்
- ☆ அதன் வேரும் மூலமும் எப்பொழுதும் ஒன்றே
- ☆ இந்த வேகம் நம் அமைப்பின் கூறுகளான அம்சம்
- ☆ உலகம் விழித்து உடன் எழுப்பிய கூக்குரல்
- ☆ நம்மைச் சுற்றி வளைய வந்து தெய்வத்தைக் கட்டிப் போட்டு
- ☆ பகுத்தறிவு பிறந்தாலும், ஆத்மா ரூபம் பெற்றாலும்

☆ விலங்கிலும், ஊர்வனவற்றிலும், சிந்திக்கும் மனிதனிலும்

☆ அது தொடரும். அது அவர் வாழ்வின் ஊற்று

☆ வாழ்வும் மூச்சும் நிலைபெற இதுவும் தேவை

☆ அறியாத சிறு உலகில் ஆத்மா

☆ சிறைப்பட்ட ஜீவியத்தைக் காப்பாற்ற வேண்டும்

☆ நடுங்கும் புள்ளியில் விரையும் நீரென

☆ இருண்ட ஜடத்தின் அனந்தமான வீச்சு

☆ அளவு பருத்து, ஒளி நிமிர்ந்து நோக்கி

☆ இயற்கை மூலத்தின் முடிச்சால் வாழ்கிறது

☆ தாழ்ந்த சக்திகளின் பிடி தளராமல் செயல்படுகிறது

☆ அறியாத ஆழத்தினின்று உணர்வின் வேகம் உந்தி எழுகிறது

☆ ஜட சூன்யத்திற்கு அண்டை வீட்டுக்காரனாகி

☆ அறிவில்லாத உலகம் இதைச் சட்டமாகக் கொண்டது

☆ இருண்ட பரவெளியின் புரியாத புதிரில்

☆ அனந்தன் தன்னை இழந்த தீவிரத்தில்

☆ அனைத்தும் அழியும் சூன்யத்தில் அமிழ்ந்து

☆ அசத்தின் இருளைக் காப்பாற்றுவதென்பதில்லை

☆ ஜீவன் இருளில் மூழ்காவிட்டால்

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***பூமியின் ஆன்மா புதுவையிலுறைகிறது.***



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/66) மனிதனுக்கோ, ஆன்மாவுக்கோ பரிணாம வளர்ச்சி தேவையில்லை. அதைத் துரிதப்படுத்தும் அவசியமுமில்லை. இறைவனுக்கு அந்த அவசியம் ஏற்படலாம். தான் பெறும் ஆனந்தத்தின் நிலையை உயர்த்த இறைவன் நினைத்தால் ஆன்மீகப் பரிணாமத்தின் மூலம் ஒளிந்ததைக் காண முன்வந்து அதைச் சாதிக்கலாம்.**

☆ **ஒளிந்ததைக் காண ஓடி வருவது பரிணாமம்.**

- நாம் கடவுள் என்பது பிரம்மம் எனக் கொள்கிறோம். அது தவறல்ல. ஆனால் சரியில்லை.
- பிரம்மம் கடவுளைக் கடந்த நிலை.
- சிவன், விஷ்ணு, பிரம்மா, இந்திரன், லக்ஷ்மி, சரஸ்வதி, காளி போன்றவர்களைக் கடவுள்கள் எனவும், இவர்கட்கெல்லாம் ஆதியைக் கடவுள் எனவும் கூறுகிறோம்.
- எல்லாம் அறிந்தவன், எல்லாம் வல்லவன், ஆனந்தமயமான கடவுள் என்பது சத்திய ஜீவியத்தின் காலத்தைக் கடந்த நிலை.
- சச்சிதானந்தம் அதற்கு உயர்ந்த நிலை.
- வேத ரிஷிகள் சச்சிதானந்தத்தையடைய கடவுள்களின் உதவியை நாடினர்.
- பிரம்மம் சச்சிதானந்தத்தைக் கடந்த நிலை.
- மனிதனுள் உள்ள கடவுளுக்கு ஆன்மா எனப் பெயர்.
- ஆன்மீகப் பரிணாமம் என்பது உடல், உணர்வு, மனத்தாலான மனிதன் இவையெல்லாம் ஆன்மாவாலானவை. பரிணாமத்தால்

மனம் ஆன்மாவாகிறது. பரிணாமம் உணர்வை மனமாக்கி, மனத்தை ஆன்மாவாக்குகிறது. உடலை உணர்வாக்கி, உணர்வை மனமாக்கி, மனத்தை ஆன்மாவாக்குவது ஆன்மீகப் பரிணாமம் எனப்படும்.

- தகப்பனார் குழந்தைகளுடன் விளையாடுவது, படிப்பு கற்பிப்பது கடந்த 20 அல்லது 30 வருஷமான பழக்கம். அதற்கு முன் அரிபொருளாக அது காணப்படும். குழந்தையின் வளர்ப்பு, படிப்பு அம்மா செய்வது என்பது பரம்பரை வழக்கம். ஒரு தகப்பனார் குழந்தைக்குக் கதை சொல்ல ஆரம்பித்தால் அவர் ஆபீஸுக்குப் போக முடியாது. விளையாட ஆரம்பித்தால் குழந்தை அவரை அனுப்பாது. அது குழந்தை மிகவும் விரும்புவது. தகப்பனார் குழந்தைக்காகச் செய்பவை அவை. குழந்தைக்குக் கற்பிப்பதும், அதனுடன் விளையாடுவதும் தனக்கே ஆனந்த அனுபவமானால் தகப்பனார் அதை விட்டு அகலமாட்டார். ஆன்மீகப் பரிணாமம் அப்படிப்பட்டது. தகப்பனார் குழந்தையுடன் விளையாடும் பொழுது தான் பெறும் இன்பம் அனுபவித்தறியாதது என்று காண்பார் என்பது மிகப்பெரிய உண்மை. குழந்தைக்குக் கற்பிக்கும் பொழுது தகப்பனார் தான் கற்பிப்பவற்றை மேலும் மேலும் உச்சகட்டத்தில் அறிகிறார் என்றும், இதுவரை அந்த அறிவு பெற்றதில்லை எனவும் காண்பார். குழந்தையுடன் விளையாடும் பொழுதும், கல்வி புகட்டும் பொழுதும் தகப்பனார் குழந்தையைப் பற்றியும், அதன் உலகத்தைப் பற்றியும் அதுவரை தான் கற்றறியாதவற்றைக் கற்கிறார்.

  குழந்தை உலகம் நம் உலகை விடப் பெரியது.

  அதன் கற்பனைக்குக் கடிவாளமில்லை.

  மனிதனுக்குரிய அளவு, குழந்தைக்கில்லை.

  அதன் மனம் நேரடியாகப் பிரம்மத் தொடர்புடையது.



  குழந்தை கல்வியை மட்டும் ஏற்கவில்லை.

  கல்வி மூலம் பிரம்மத்தை அறிகிறது.

  குழந்தை மூலம் தகப்பனார் பிரம்மத்தை அறிகிறார்.

  தான் வாழ்வில் பெற முடியாததை அவர்

  குழந்தை மூலம் பெறுகிறார்.

- பெற்றோர் குழந்தை மூலம் உயர்ந்த கல்வியையும், பரந்த உலகையும், பிரம்மத்தையும் இடைவிடாது அறிகிறார்கள் என்பது போல் பிரம்மம் பரிணாமத்தின் மூலம் பெரும் ஆனந்தத்தை அடைகிறது.

***

**II/67) இலட்சக்கணக்கான பிரபஞ்சங்களைத் தன் ஓர் அசைவால் பரமாத்மா நிரப்ப முடியும் என்று பகவான் கூறிய பொழுது, அவர் தான் பார்த்ததைச் சொல்லவில்லை. தன் நிலையை அறிவித்தார்.**

☆ **பகவான் நிலை பரமாத்மாவின் நிலை.**

- பிரெஞ்சுப் புரட்சியை ஓர் யோகி இமயமலையில் செய்த தவத்தால் எழுப்பினார் என்று பகவான் கூறுகிறார். தானே செய்ததாகக் கூறவில்லை.
- கீதையில் கிருஷ்ணபரமாத்மா அது போன்ற பல விஷயங்களைக் கூறும்பொழுது தான் செய்தவை அவை என்கிறார்.
- மகாத்மா என்ற காவியத்தில் குத்துமஸ் என்பவன் ராஜ யோகம், ஹட யோகம் ஆகியவற்றை 3 நாட்களில் செய்ததாகக் கூறுவது பகவான் தன் அனுபவத்தைக் கூறுவது.
- இன்டர்நெட்டில் ஒரு செய்தி மட்டும் போகாது. ஓராயிரம், ஓராயிரம் கோடி செய்திகள் போகின்றன.

- எலக்ட்ரிசிட்டி, எலக்ட்ரானிக்ஸ் ஆக மாறும் பொழுது ஒரு வேலை அனந்தமாகிறது.
- நினைவில் ஆன்மா வெளிப்பட்டால் எந்த ஒரு காரியத்தை எவரும் செய்ய முடியாதோ அதைப் போல் 100 காரியங்களைத் தொடர்ந்து ஒருவரே செய்கிறார்.
- ஒரு மனிதன் எத்தனை சொற்களைப் பேச முடியும்?
  - பேசப் பேச பேச்சு வளரும்.
  - செலவு செய்யும் பொழுது வளர்வதே அனந்தத்தின் குணம்.
- பரமாத்மா, பரம புருஷா, பராத்பரா என அறியப்படும் நிலையைப் பகவான் கூறுகிறார்.
- நமது அன்றாட வாழ்வில் அனந்தம் நம் அளவில் வெளிப்படுவதை ஆயிரம் முறை நாம் காண்கிறோம்.
  - தோட்டத்துக் கிணறு தலைமுறை தலைமுறையாக வற்றாத ஊற்றுள்ளது.
  - காட்டில் நிலம் பூமி உற்பத்தியான நாளாக முளைத்து வளர்கிறது.
  - காற்றுக்கு வயதேது? அது க்ஷணம் இல்லாத நேரமுண்டா?
  - கடல் கண்ணுக்கு எட்டிய அளவு பரவுகிறது.
    அதன் காலத்தை மனம் அறியாது.
  - அச்சுக் கோர்த்தபின் பிரதிகட்குக் கணக்குண்டா?
  - பேசும் வாய் உற்பத்தி செய்யும் சொல்லுக்கு முடிவுண்டா?
  - மக்கள் பிறந்தது முதலில் எப்பொழுது? முடிவு உண்டா?
  - நீல வானத்திற்கு நிலையாமையுண்டா?
  - தாயின் பாசம் முடிவு கண்டதா?
  - கணவனும் மனைவியும் காரில் வாக்குவாதம் செய்த பொழுது கணவன், மனைவி கையிலிருந்த புத்தகத்தைப்



பிடுங்கி வெளியில் எறிந்தார். கார் நின்றது. நள்ளிரவு. மனைவி இறங்கிப் போய் புத்தகத்தை எடுத்தார். நிர்மானுஷ்யமான இடத்தில் வயதான ஒருவர் அவரை விளித்து, “உங்கள் பிணக்கை நான் அறிவேன். கணவர் குற்றச்சாட்டை மறுத்துப் பேசாதே” என்றார்.
  - ஹைதராபாத்தில் ஆப்பரேஷனான நோயாளியை விட்டு விட்டு தரிசனத்திற்கு டாக்டர் வந்துவிட்டார். நோயாளி அவஸ்தையால் டாக்டரைக் கூப்பிட்டார். பகவான் வந்து கட்டை விரலை உலுக்கினார், அவஸ்தை நின்றது.
  - பகவான் சண்டை போடும் மனைவியை நாடியும், அவஸ்தைப்படும் நோயாளியைத் தேடியும் வரும் அற்புதத்திற்கு முடிவுண்டா?
  - முடிவில்லாத மூலம் பிரம்மம்.
  - அது வாழ்வில் வெளிப்படுவது பிரம்ம ஜனனம்.

*தொடரும்....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***உடனே நடக்க அவசரப்படுவது மனம்.***

***அவசரம் அவசியம் அழிய வேண்டும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***நேரம் வந்தால் ஆழம் தெரியும்.***

***கூர்மையான பார்வைக்கு எப்பொழுதும் தெரியும்.***

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 60. இதயத்தில் பொன்னொளி - ஒவ்வொரு லோகத்துக்கும் உரிய நிறமுண்டு.

- புரந்தரதாஸர் மனைவிக்கு மூக்குத்தியும், காரைக்கால் அம்மையாருக்கு மாம்பழமும் கிடைத்தபின், குடும்பத்தில் அவர்கட்கு வேலையில்லை.
- பொன்னொளியை நெஞ்சில் கண்டவுடன், இனி அவருக்கு வேலை யோகத்தில் என அறிய வேண்டும்.
- காங்கிரஸ் M.P.க்களில் மூத்தவர் நரசிம்மராவானால், M.P.ஆக இல்லாவிட்டாலும் பிரதமர் பதவி அவருக்கே.
- புதுவைக்குப் புதியதாக வருபவர்கள் நீல நிற சுண்ணாம்பு அடித்த வீடுகளை ஆசிரம வீடு என அறிவார்கள்.
- நீல வண்ணக் கண்ணா என்ற நீல நிறம் கிருஷ்ணனுடையது. அது தெய்வீக மன நிறம்.
- மஞ்சள் நிறம் மனத்தைக் குறிக்கும்.
- சிவப்பு நிறம் உடலுக்குரியது.
- ஊதா நிறம் உயிருக்குரியது.
- ஒவ்வொரு லோகத்திற்கும் உரிய நிறம் உண்டு, மணம் உண்டு.
- ஆன்மீகச் சூழல் ஒருவரிடமிருந்தால், சந்தன மணம் அவர் மீது எழும்.
- புரந்தரதாஸர், மனைவிக்கு வைர மூக்குத்தி அளித்தார்.
- ஏழைப் பிராமணன் மகள் திருமணத்திற்காக மனைவியிடம் உதவி கேட்டான்.
- அவர், கணவன் அளித்த வைர மூக்குத்தியை அவனுக்குக் கொடுத்தார்.



- பெற்றவன் விவரம் தெரியாமல் அதை விற்கப் போன கடை புரந்தரதாஸருடையது.
- விவரம் அறிந்த தாஸர் மனைவியிடம் வந்து கோபமாக, “எங்கே மூக்குத்தி?” என்றார்.
- பயந்தவள், விஷம் கரைத்துக் குடிக்கப் போனாள்.
- கரைக்கும் பொழுது ஏதோ தட்டுப்பட்டது.
- அது வைர மூக்குத்தி.
- இனி எனக்குக் குடும்பத்தில் வேலையில்லை என மூக்குத்தியைக் கணவனிடம் கொடுத்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறினாள்.
- காரைக்கால் அம்மையார் மாம்பழக் கதையும் இதுவே.
- ஆன்மா விழித்த நேரம் அற்புதம் நடக்கிறது.
- பொன்னொளி சத்திய ஜீவிய உலகுக்குரியது.
- பகவான் சமாதியானபின் அவர் உடம்பில் பொன்னொளி பரவியது.
- அப்பொன்னொளி உலகுக்கு வரவே அவர் உடலை நீத்தார்.
- அன்பர்கட்கு மனத்தில், போட்டோவில், நெஞ்சில், பொன்னொளி தியானத்தில் தெரியும்.
- அது மூக்குத்தி, மாம்பழம் போன்றது.
- **அதைக் கண்ட அன்பர் தனக்கு யோகம் பலிக்கும் என அறிய வேண்டும்.**
- ராஜ யோகம் ஆயிரத்தில் ஒருவருக்குரியது.
- கீதை யோகம் அதைக் கடந்தது.
- பூரண யோகம் அதையும் கடந்தது.
- அதற்குரிய தகுதியை நெஞ்சில் பொன்னொளி அறிவிக்கிறது.

*தொடரும்.....*

## P.34 Then our thoughts sin against its unknowableness

### அறிய முடியாத பிரம்மத்தை அறிந்தோம் என நினைப்பது பிரம்மத்தை அறியாததாகும்.

- குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்று குழந்தையைத் தெய்வமாக்குகிறது.
- பகவான் ஆணின் சிறப்பை, "பெண்ணுக்குச் சரணம் அடைந்து பூர்த்தியாகிறது" என்று கூறுவதை நான் அடிக்கடிக் குறிப்பிட்டு, அக்கருத்தை வெளியிடும் பாரதியின் பாடலை, "அவள் தாளினைக் கைக்கொண்டு மகிழ்ந்திருப்பான்" மேற்கோளாகக் காட்டுவதுண்டு.
- நட்பு, உறவு, உள்ளுணர்வு, வீட்டைக் குடும்பமாக்கும் பண்பு, பாட்டியின் இதம், தகப்பனாரின் இங்கிதம், மனம் நெகிழ்ந்து உணர்வாவது போன்ற உயர்ந்த உணர்ச்சிகள்.

*கணவன், மனைவி உறவில் சரணாகதி தத்துவமாக, குறிப்பாக ஆண் பெண்ணைச் சரணடைவதில்*

அபரிமிதமாகப் பூர்த்தியாகி, அனந்த வீச்சில் அமிர்தமாகும் ரஸம் குடும்பப் பண்பு.

- இந்த உறவில் திறமை, காரியம் முடிவது, இலாப-நஷ்டக் கணக்கிற்கு இடமில்லை.
- 1908இல் பகவான் சிறையில் இந்தியா பூரண சுதந்திரம் பெற்றுவிட்டது எனக் கண்டபொழுதே இங்கிலாந்து அதை பண்பின் உயர்வால் ஏற்கத் தயாராக இருந்ததையும் கண்டார்.
- அரிசி சோறாக வேக வேண்டும் என்பது போன்று அடிமை



நாடு விடுதலை பெற ஆயுதமேந்தி போராட வேண்டும் என்பதும் சட்டம்.

- நாடு அப்பாதையை ஏற்றிருந்தால் சுமுகமாகச் சுதந்திரம் அப்பொழுதே போராட்டத்தின் வழி, போராட்டமின்றி வந்திருக்கும்.
- எப்படிப் போராட்டம் வழி போராட்டம் தவிர்க்கப்படும் என்பது கேள்வி.
- போராடி வெல்லக்கூடியவன் போராடத் தயாரானால் போராட்டமற்ற வெற்றியுண்டு.
- இந்தியா அப்பொழுது சுதந்திரம் பெற்றிருந்தால் உலகப் போர்கள் மூண்டிரா.
- இந்தியா உலகத்தின் குருவாகியிருக்கும்.
- அன்று பகவான் சூட்சுமத்தில் தீய சக்திகளைக் கரிய உருவமாகக் கண்டு, அவை உருவம் பெற்றுவிட்டதால் ஜட உலகில் போரைத் தவிர்க்க முடியாது எனக் கண்டார்.
- Orthodoxy வைதீகக் கட்டுப்பெட்டி, இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கும் நிரம்பிய சக்தி.
- உலகில் அதிகாரம், செல்வம், ஞானம் எவருக்கும் சொந்தமல்ல, எல்லோர்க்கும் உரியது.
- நிலம் உழுபவனுக்கே சொந்தம் என்ற கோஷத்தில் உண்மையுண்டு என்றாலும், துணி வெளுப்பவனுக்கே உரிமையானது, குழந்தை வளர்க்கும் தாய்க்கே உரிமையாகுமா என்பதற்குப் பதில் வேண்டும்.
- எவர் பெறும் ஞானமும் அவருக்குரியதல்ல, உலகத்தின் பொதுச் சொத்து.
- பொதுச் சொத்தை ஒருவரே பெற முயல்வது தவறு ஆதிக்கமாகும். அதனால் அவருக்கே நல்லது வாராது.
- ஞானி, அரசன், வியாபாரி அது போல் ஞானம், அதிகாரம், செல்வத்தை அனைவருக்கும் பகிர்ந்து தருவது சரி. தான் மட்டும் பெறுவது தவறு.

❋❋❋

**Pg.306 Vol. V** **Before the first Man was born Mother's memory could go. There was direct power over Matter.**

**அன்னையின் நினைவு மனிதன் பிறப்பதற்கு முன் சென்றது. ஜடம் நம் செயலுக்குட்பட்டது.**

- ஒரு பொருளை நகர்த்த நாம் செயல்பட்டு நகர்த்துகிறோம். நினைவே நகர்த்தினால் ஜடம் நம் செயலுக்குட்பட்டதாகும்.
- நினைவு பிறப்பதற்கு முன்னும், இறப்பிற்குப் பின்னும் இருப்பதில்லை.
- பிறப்பதற்கு முன்னுள்ள நினைவை பூர்வஜென்ம ஞாபகம் என்கிறோம்.
- யோகத்தில் அது பலிப்பதுண்டு.
- நமது ஸ்தாபனத்திற்கு முதல்வரோ, பிரதமரோ ஒரு விழாவுக்கு வரலாம். அது யோகம் பலிப்பதைப் போல. என்றும் பிரதமர் நம் ஸ்தாபனத்திற்கு வருவது என்பது அன்னை பெற்ற பூர்வஜென்ம ஞாபகம்.
- கம்பன் கவிதையை நாம் மனப்பாடம் செய்து சொல்வது முடியும்.
- நாமே கவிதை எழுதுவது, நாமே கம்பன் போன்ற கவியாவது.
- அன்னைக்குப் பூர்வ ஜென்ம ஞாபகம் வந்தது அன்னையே ஞாபகத்தை ஏற்படுத்திய இறைவனாவது.
- நிலம் பயிராவது விவசாயம். இயற்கை உற்பத்தி செய்ததை மனிதன் உற்பத்தி செய்கிறான்.
- நிலத்தின் சத்தை அறிந்து உரமிட்டால் ஏராளமாகப் பயிராகிறது. நிலம் மனித அறிவால் செயல்படுவது இது.



- மாமரத்தினிடையே பிரார்த்தனை செய்தால் பருவம் மாறிய பின்னரும் பழம் தரும்.
- இது தெய்வ சக்திக்குட்பட்டு மரம் செயல்படுவது.
- மரமே தன்னுள்ளிருந்து தெய்வ சக்தியை வெளிப்படுத்தினால் அது வருஷம் முழுவதும் பழுக்கும்.

  ஆயிரம் பழம் தரும் மரம் 10,000 பழம் தரும். தினமும் அபரிமிதமாகப் பழுக்கும்.
- சத்திய ஜீவிய திருவுருமாற்றம் பூமியில் ஏற்பட்டால், ஜடமும் தனக்கு உயிரும், ஆன்மாவும் இருப்பதாகச் செயல்படும்.
- நிலம் அட்சய பாத்திரமாகும். உலகில் உணவுப் பற்றாக்குறையிராது.
- நமக்கு அஞ்ஞானம் பெரும் பகுதி. ஞானம் சிறு பகுதி.
- படிப்பால் அஞ்ஞானம் குறைந்து ஞானம் அதிகமாவதால் விஞ்ஞானம் எழுகிறது.
- சத்திய ஜீவியத்தில் அஞ்ஞானமேயில்லை. அது ஞானமாகவே செயல்படும்.
- நம் உடல் நலம் நம்மைவிட டாக்டருக்குத் தெரியும்.
- 50,000 ஆண்டுகட்கு முன் மனிதனுக்குத் தன் உடல் நலனை அறியும் திறமையிருந்தது.
- மூலிகைகளின் சக்தியை மனிதன் அப்படியே அறிந்தான்.
- ஞானம் முதிர்ந்தால் உலகை மனம் அறியும்.
- நினைத்தது நடக்கும்.
- எங்குச் செல்ல வேண்டுமானாலும் அதே சமயம் உடல் அங்கிருக்கும்.
- இது சத்திய ஜீவிய ஞானம்.
- அன்னை இந்த ஞானத்தைப் பெற்ற பொழுது ஜடம் அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டது.
- அது புது உலகம்.

❀❀❀

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

268. *அடி நாக்கிலே நஞ்சும் நுனி நாக்கிலே அமிர்தமா?*

**அடி நாக்கு நஞ்சும் நுனி நாக்கின் அமிர்தமாகும்.**

269. *கண்டால் காமாச்சி நாயகர், காணாவிட்டால் காமாட்டி நாயகர்.*

**காமாட்டி நாயகரும் கருத்தின் ஆழத்தில் காமாச்சி நாயகர்.**

270. *ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம்.*

**ஏறினாலும் எருதுக்குச் சந்தோஷம், இறங்கினாலும் நொண்டிக்குச் சமம்.**

271. *எருமை வாங்குமுன் நெய் விலை கூறுகிறதா?*

**அன்பன் எருமை வாங்குமுன் நெய் விலையைப் பெறுவார்.**

272. *உடல் ஒருவனுக்குப் பிறந்தது, நாக்கு பலருக்குப் பிறந்தது.*

**நாக்கு உடல் போல உயர்ந்து செயல்படும்.**

273. *தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்.*

**அருள் நஷ்டமானாலும் அதிர்ஷ்டமாகும்.**

274. *உலகத்துக்கு ஞானம் பேய், ஞானத்திற்கு உலகம் பேய்.*

**பேயைக் கண்டு கொள்ள முயன்றால் அது உலகமும் ஞானமும் ஆகும்.**

275. *வண்ணானுக்கும், நிர்வாணிக்கும் உறவென்ன?*

**நிர்வாணியான வண்ணான்.**

*தொடரும்....*

❋❋❋



# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 3. அன்னையின் வழியில் அன்றாட வாழ்க்கை

பெருந்தன்மையைப் பற்றியும், அதற்கு எதிரான 'சின்ன புத்தி'யைப் பற்றியும் நாம் அறிவோம். சின்ன புத்தியில் கெட்ட புத்தியும் உண்டு; நல்ல புத்தியும் உண்டு. கோள் சொல்லுதல் கெட்ட புத்தியாகும். ஒருவருடன் பழகும்போது அவருடைய குறைகளை மட்டும் கவனிப்பது கெட்ட புத்தி இல்லை என்றாலும், மட்ட புத்தியாகும். சிறியவை, மட்டமானவை, தவறானவை என்பனவற்றை முழுவதும் தவிர்த்து, பெரியவை, உயர்ந்தவை, சரியானவை என்பனவற்றை அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயல்வதை, நாம் 'பெருந்தன்மை' என்கிறோம். அன்னையின் வழிக்குப் பெருந்தன்மை அஸ்திவாரம்; சிறிய புத்தி விதிவிலக்கு.

'நான் அன்னை வழியை விரும்புகின்றேன். அதைக் கடைப்பிடிக்க விழைகின்றேன். முழுமையாக அதை என் மனம் ஏற்றுக்கொள்கின்றது. நான் எதை எல்லாம் தவறாமல் செய்ய வேண்டும்? அவ்வழிக்குரிய இன்றியமையாத பாதைகள் எவை? தவிர்க்க முடியாதவை எவை? எவற்றை முழுவதுமாகத் தவிர்க்க வேண்டும்? யோகம் செய்யும் சாதகராக என்னைக் கருதாமல், வாழ்க்கை விளக்கம் பெற அன்னையை ஏற்றுக்கொண்ட அன்பராகக் கருதி, ஐயம் திரிபற எனக்கு உணர்த்த வேண்டும்' என ஒருவர் கேட்டால், அவருக்குத் தேவையான பதிலைச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் கீழே தருகிறேன்.

*சுருக்கம்:* உடலால் உழைப்பும், மனத்தால் நேர்மையும், அறிவால் தெளிவும், மனச்சாட்சியால் சிறப்பும், பழக்கத்தால் பக்குவமும்,

உணர்வால் நெகிழ்ந்த பக்தியும் உடையது அன்னை வழி.

*விளக்கம்:* செய்ய வேண்டியவற்றை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். அவை, *(1)* உடலால் செய்யப்பட வேண்டியவை, *(2)* உணர்வால் செய்யப்படுபவை, *(3)* அறிவால் செய்யக்கூடியவை.

உடலுக்கு முக்கியமானது செயல். அது சுறுசுறுப்பானதாக இருக்க வேண்டும். எந்த ஒரு செயலையும் காலம் தாழ்த்தாமல் விரைவாகச் (அவசரமின்றி) செய்தல் உடலால் செய்யப்பட வேண்டியதாகும். அதுவே திறமை நிறைந்ததானால், சிறப்புள்ளதாகும். அத்திறமையும், சுறுசுறுப்பும் கடமைகளை ஆற்றும்போது அறிவுக்குகந்த இலட்சியங்களைக் கடைப்பிடித்தால், உடலால் செய்யப்பட வேண்டிய அனைத்தும் செய்யப்பட்டதாகக் கருதலாம்.

உணர்வின் பங்கை முழுமையாகச் சொல்வதாக இருந்தால் ஒன்றைச் சொல்லலாம். மற்றவர்களுடன் பழகும்போது அவர்கள் மனம் நிறையும்படிப் பழக முடிந்தால், உணர்வால் தன் பங்கை நிறைவேற்றிவிட்டதாகக் கருதலாம். எந்த ஒரு காரியத்தையும் மேற்கொள்ளும் முன்பு தன் நோக்கில் அதைச் செய்யாமல், அதோடு தொடர்புடையவர்களின் நோக்கில் அதைச் செய்ய முற்படுதல் நல்லது. பொதுவாக ஒருவர் ஒரு சிறந்த காரியத்தை நல்நோக்கத்தோடும், ஆர்வத்தோடும் செய்ய முற்படும்பொழுது அது பலருக்கு இடையூறாக இருக்கும். அத்தகைய இடையூறுகளை நினைவுகூர்ந்து, அதற்கு ஏற்ப தன் ஆர்வத்தின் பாதையை அமைத்துக்கொள்வது சிறந்ததோர் உணர்வாகும்.

எனக்குத் தெரிந்த ஓர் என்ஜினீயர்*;* அவருடைய மகனும் என்ஜினீயர் பட்டத்தைப் பெற்றான். அவன் நீண்ட காலமாகப் பழகி வந்த ஒரு குடும்பத்தில் பிறந்த மூத்த பெண்ணை விரும்பினான். அவளின் தந்தை காலமாகிவிட்டார். அது வசதி அதிகம் இல்லாத நடுத்தரக் குடும்பம். அவளுக்குத் தம்பிகள் என்றும், தங்கைகள் என்றும் நிறையப் பேர் இருந்தார்கள். எனவே, அவள் வேலைக்குப்



போனால்தான் குடும்பச் சக்கரம் சுழலும் என்ற நிலை. அவள் ஒரு பட்டதாரி. வலைவீசித் தேடியதில் ஆசிரியை வேலை கிடைத்தது. அவள் வேலைக்குப் போய் வந்துகொண்டு இருந்தபொழுது அவள் மனம் அவனை நாடிப் போய்க்கொண்டு இருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் நினைத்து உருகிக்கொண்டு இருந்தாலும், அவர்கள் அதைப் பற்றி வாய் திறந்து பேசியதே இல்லை.

ஆண்டுகள் பல உருண்டோடின. அவன் ஒரு நாள் துணிந்து அவளிடம் பேசி, “உன் முடிவைக் கூறு” என்று கேட்டான். அவள் அவசரப்படாமல் நிதானமாகச் சிந்தித்துவிட்டுக் கேட்டாள்*:* “தனக்காக வாழ்கிற வாழ்க்கையை விட மற்றவர்களுக்காக வாழ்கிற வாழ்க்கையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்*?*”

“அது உயர்ந்த வாழ்க்கை” என்றான் அவன்.

“நான் அப்படிப்பட்டதொரு வாழ்க்கையை வாழ்ந்தாக வேண்டிய நிலையில் இருக்கிறேன். எங்கள் குடும்பம் என்னையே முழுவதுமாக நம்பி இருக்கிறது. என் தம்பி, தங்கைகளுக்கு என்னுடைய உதவி இன்னும் பல ஆண்டுகளுக்குத் தேவையாக இருக்கிறது. இந்த நிலையில் நான் என் விருப்பத்தை விட்டுக் கொடுத்தால்தான் அவர்கள் வாழ முடியும். அவர்கள் வாழ்வதற்காக நான் வாழாமல்போவதைத்தான் நீங்களும் விரும்புவீர்கள்” என்று தன் முடிவைத் தெரிவித்தாள் அவள்.

அவள் தியாகம் உயர்ந்த மனநிலையைக் காட்டுகிறது.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும், ‘இதைவிடத் தெளிவாகவும், சிறப்பாகவும் செய்ய முடியுமா*?*’ என்று சிந்தித்து, சிறப்பான ஒன்று தோன்றுமேயானால், அதைப் பின்பற்றுவதே அறிவின் கடமை.

ஒரு போலீஸ்காரர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, வயிற்றுப் பிழைப்புக்காக வாட்ச்மேன் வேலை பார்த்துவந்தார். அவருடைய மகன் எஸ்.எஸ்.எல்.ஸி.யில் தேர்வு பெற்றான். புத்திசாலிப்

பையன். இன்னும் நிறையப் படிக்க வேண்டியவன். ஆனால் அதற்கான வசதியில்லை. அவனை வேலைக்கு அனுப்ப முயன்றார்கள். அந்தப் பையனின் சகோதரியின் கணவர் ஒரு கடை வியாபாரி. கடையைச் சிறிதாகத் தொடங்கினார். இப்பொழுது வசதி பெருகி விட்டது. அவரும் தம் மைத்துனனுக்கு வேலை தேடிக்கொண்டு இருந்தார். அப்பொழுது அவர் தம் மைத்துனன் படித்த பள்ளிக்குச் சென்று அவனுக்காக ஒரு சிறப்புச் சான்றிதழ் கேட்டார். அதற்கு ஆசிரியர், "உங்கள் மைத்துனன் நல்ல புத்திசாலி. அவனை பாலிடெக்னிக்கில் சேர்த்தால், நிச்சயம் உதவித் தொகை கிடைக்கும். அதுவரை தேவைப்படும் உதவியை நீங்கள் செய்தால், எதிர்காலத்தில் அவன் ஒரு பெரிய வேலைக்குப் போகலாம். அல்லது ஒரு தொழிலையே கூடத் தொடங்கலாம்" என்றார்.

அவர் ஆசிரியரின் கருத்தை ஏற்று, தம் மைத்துனனை மேலும் படிக்க வைத்தார். அவனும் வெற்றிகரமாகத் தன் படிப்பை முடித்துவிட்டு, சொந்தத்தில் ஒரு தொழிலைத் தொடங்கினான். அவன் அதற்குப் பிறகு ஓராண்டு சென்று அந்த ஆசிரியரை சந்தித்து, "நீங்கள் என் மாமனின் மனத்தை மாற்றி என் வாழ்க்கையைத் திருப்பிவிட்டதால், இன்று நான் மாதம் பத்தாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறேன்" என்று கூறி, அவருக்குத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.

நாம் செல்லும் பாதையைவிடச் சிறந்த பாதை ஒன்று தெரியுமானால், அதை ஏற்றுக்கொள்ளுதல்தான் அறிவின் கடமை.

'எவற்றைச் செய்ய வேண்டும்?' என்ற விளக்கத்தைவிட, 'எவற்றைச் செய்யக்கூடாது?' என்ற விளக்கம் மிகப்பயனுடையது. சோம்பேறித்தனத்தை வளர்க்கும் செயல்களையும், ஆடம்பரமான காரியங்களையும், பிறர் மனம் புண்படும்படியான செயல்களையும், 'அறிவில்லாத செயல்' என்ற அழுகல் கணக்கில் வரும் செயல்களையும் அறவே புறக்கணித்தல் அவசியம்.



என் அனுபவத்தில் பார்த்த பல விஷயங்களைக் கூறி, அவற்றைச் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

35,000 ரூபாய் ஆண்டு வருமானம் வர வேண்டிய ஓர் எஸ்டேட்டை, 65,000 ரூபாய் வரை செலவு செய்த பிறகும் ஒரு தன்வந்தரால் இலாப நிலைக்குக் கொண்டுவர முடியவில்லை. அந்த நிலையில் அவர் அதை விற்க முற்படுகிறார் என்று தெரிந்தால், எவ்வளவு பெரிய தனவந்தராக இருப்பினும் அதை வாங்கக்கூடாது. அதில் எங்கேயோ கோளாறு இருக்கின்றது. அந்தக் கோளாறு தெரியாமல் வாங்கிவிட்டு, பிறகு திணறக்கூடாது. இது அறிவுக்குப் புறம்பான செயல். மேலும் இது பெருமைக்கு ஆசைப்பட்டுச் சிறுமையை விலை கொடுத்து வாங்குவதாகும்.

ஒரு பிஎச்.டி. பட்டதாரிக்கு அந்தக் காலத்தில் 700 ரூபாய் மாத வருமானம். அவர் வாழ்க்கையில் அகலக் கால் வைத்து, ஆடம்பரமாகச் செலவு செய்து, 30,000 ரூபாய் கடனாளியாகிவிட்டார். அந்த நிலையில் அவர் திருந்துவதாக நினைத்துக்கொண்டு, 'இனிமேல் மாதம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்வதில்லை' என்று தீர்மானித்தார். அப்பொழுதும் அவர் திருந்தவில்லை. வருமானத்திற்கு மேல் செலவைப் பெருக்கிக்கொள்வதும், கண்களை மூடிக்கொண்டு கடன் வாங்கி, பிறகு விழி பிதுங்கி நிற்பதும் அறிவற்ற செயலின் சிகரங்களாகும்.

'பத்தாயிரம் ரூபாய் சொத்து இல்லாத ஒருவர் பத்து லட்சம் கடன் வாங்கி இருக்கின்றார்' என்ற வதந்தி உன்னை வந்து சேர்ந்தால், அதை அப்படியே நம்பி ஊரெல்லாம் பரப்புவது அறிவுக்குப் பொருத்தம் இல்லாத, அர்த்தமற்ற செயலாகும்.

'மற்றவர்களுடைய உழைப்பின் பலன் தனக்கு வரும்' என்று கணக்குப் போட்டு, அதன் போக்கில் வேலை செய்தால், அவர்களுடைய உழைப்பின் பலன் அவர்களை நாடித்தான் போகும். உன் அறிவீனத்தின் பலன் மட்டுமே உன்னைத் தேடி வரும்.

உன்னுடைய கடமைகளை மற்றவர்கள் நிறைவேற்றும் வகையில் நீ வாழ்க்கையை அமைத்துக்கொண்டால், கடமைகள் நிறைவேறா; கடன்களே நிறையச் சேரும்.

'வாழ்க்கையில் எந்த ஒரு செயலும் முழுமையானது' என்ற அறிவு இல்லாமல், பணி செய்யும் இடங்களில் செய்ய வேண்டிய கடமைகளைப் புறக்கணித்துவிட்டு, சுயநலம் காரணமாகத் தன் வீட்டுக் காரியங்களை மட்டும் பொறுப்போடு செய்து, அதற்குரிய பலனை எதிர்பார்த்தால், வேலை செய்யும் இடங்களில் செய்த தவறுகளுக்கு இங்கே தண்டனைதான் கிடைக்கும்; பலன் கிடைக்காது.

மேலதிகாரிகளுக்கு ஆத்திரமூட்டும் காரியங்களை ஏராளமாகச் செய்து, இயக்குநருக்கு எதிரியான ஒருவரைத் தலைமை ஏற்க வைத்து விழாக் கொண்டாடினால், அதன் பின்விளைவாக ஒருவருக்கு வேலை போகின்றது. 5 ஆண்டுகளாக வேலை தேடியும் அவருக்கு வேலை கிடைக்கவில்லை. அவருக்கு அதற்கான காரணத்தை உணர முடியவில்லை. 'எனக்கு ஏன் இந்த நிலை?' என்று பொருமுகின்றார். அவர் செய்த தவற்றுக்குத்தான் அந்த நிலை. கையிலே பணம் இல்லை. ஆனால் மனத்தில், 'சொந்தத்தில் எப்படியாவது ஒரு வீடு கட்டிவிட வேண்டும்' என்று ஆசை துடிக்கின்றது. கடன் வாங்கி மனை வாங்குகின்றார். பிறகு வாங்கிய கடனுக்குத் தம் சம்பளத்தை வாங்கி, வட்டியாகக் கட்டுகின்றார். வாழ்க்கையை ஓட்ட அவருக்கு விழி பிதுங்கிப் போகின்றது. பிறகு அவர் எந்தப் பிறவியில் வீட்டைக் கட்டி முடிக்கப்போகின்றார்? இது போன்ற அர்த்தமற்ற ஆசைகளை அடிப்படையாகக் கொண்ட காரியங்களைச் செய்தல் கூடாது.

ஒவ்வொருவருடைய வாழ்விலும் நல்லெண்ணம் கொண்டு செயல்படக்கூடிய ஒரு நல்ல ஆத்மா இருக்கும். அந்த ஆத்மாவிடமே தம் பெருமையைப் பறைசாற்றிக்கொள்ளும் குணம் பலரிடம் உண்டு. அவர்கள் ஒன்றை உணர வேண்டும். அந்தக் குணத்தால் அந்த



ஆத்மாவிடம் இருந்து மட்டுமே கிடைத்துக்கொண்டு இருக்கும் ஒரேயொரு சௌகரியத்தையும் இழக்க நேரும்.

'தனக்குக் கீழேயுள்ளவர்கள், தன் பொறுப்பை நிறைவேற்றுவார்கள்' என எதிர்பார்த்தாலும், 'அது நடக்காது; நாளைக்கே தன் பதவி அவர்களுக்குப் போய்விடும்' என உணர முடியாத நிலை, அவல நிலையாகும்.

'மாமனாரோ, மற்றவர்களோ சம்பாதித்த சொத்தை, தான் அனுபவிக்கலாம்' என்னும் வகையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால், 'முதலில் ஓரளவு சௌகரியமாக இருக்குமே தவிர, பின்னால் எல்லா விஷயங்களும் பிரச்சனையாக மாறிவிடும்' என்பதை பலர் உணர்வதில்லை. உணர்ந்தால் உபத்திரவம் இல்லை.

அன்னையைத் தெய்வமாக உணர்ந்து, ஏற்றுக்கொள்ளுதல் ஆத்மாவுக்குச் சிறப்பு. அன்னையின் முறைகளை உணர்ந்து, வாழ்வில் கடைப்பிடித்தால், வாழ்க்கையில் நிச்சயம் தோல்வி இருக்காது. நம் முயற்சியின் அளவுக்கு ஏற்ப வெற்றியின் அளவுகளும் இருக்கும். அளவுகள் கூடலாம், குறையலாம்; ஆனால் இந்த உலகத்திலிருந்து கிடைக்கும் மற்ற எல்லாவற்றையும் விட அவை மகோன்னதங்களாக இருக்கும்.

அன்னைக்குக் கடுமையான நோன்புகள் தேவையில்லை. ஆனால் பக்குவமான, கண்ணியமான கட்டுப்பாடு தேவை. கட்டுப்படாமல் ஓடும் நீர் காட்டாறு ஆகின்றது. கட்டுப்படுகின்ற நீர் மின்சாரம் ஆகின்றது. காட்டாறாக ஓடுகின்ற நம்மை மின்சாரமாக ஒளி பெற வழிகாட்டுகின்றார் அன்னை. இதை உய்த்து உணர்ந்து, நிதானமாகப் பக்குவத்தை மேற்கொண்டால், நம் அன்றாட வாழ்வு அன்னை வழியில் ஆத்மீகச் சிறப்பு நிறைந்த யோக வாழ்வாக மாறும்.

*தொடரும்....*

❋❋❋

# சொல்பவர் சொன்னதால்

இல. சுந்தரி

முக்கியமான ஒரு விஷயத்தை நெட்டில் தேடிக் கொண்டிருந்தேன். சற்று சலிப்பு வந்தது. உடனே அறையை விட்டு வெளியே வந்து பாண்ட் பாக்கெட்டிலிருந்து சிகரெட் பெட்டியையும், லைட்டரையும் எடுத்தேன். அதே நேரம் 'வீல்' என்று உயிரே உறைவது போல் குழந்தையின் அழுகுரல் கேட்டது. அப்படியே அவற்றைப் பாண்ட் பாக்கெட்டில் திணித்தபடி விரைந்து வந்தேன். யாமினி (என் மனைவி)தான் குழந்தையைச் சுரீரென்று முதுகில் அறைந்திருக்கிறாள்.

"உனக்குப் பொறுமையே கிடையாதா? சின்னக் குழந்தைக்கு என்ன தெரியும்? எதற்கு இப்படிப் பேயறை அறைந்தாய்? நயமாகப் பேச வாராதா உனக்கு?" என்றேன்.

"ஆமாம், நடந்த காரியத்திற்கு நயமாகத்தான் பேச வேண்டும். பாருங்கள் இங்கே" என்று தரையைக் காட்டினாள்.

கையில் சன்பிளவர் ஆயில் கவரைப் பிரித்து வைத்திருக்கிறாள். எண்ணெய் ஜாடியில் விழாமல் தரையில் விழுந்து ஓடிக்கொண்டிருந்தது.

"நீ தவறு செய்துவிட்டு கோபத்தைக் குழந்தையின் மேல் ஏன் காட்டுகிறாய்?" என்றேன் நயமாக.

"ஆமாம், எண்ணெயை ஊற்றும்போது கையைப் பிடித்திழுத்தது உங்கள் குழந்தை. தவறு என்னுடையதா?" என்று ஹமாம்சோப் விளம்பரப் பெண்ணைப் போல் எங்கள் குழந்தையை உங்கள் குழந்தை என்றாள்.

"சரி, சரி. விடு ஏதோ அன்பால் உன் கையைப் பிடித்திழுத்து



கூப்பிட்டிருக்கிறாள்" என்று சமாதானமாய்ப் பேசி இரண்டு வயது பாப்பாவைத் தூக்கிக் கொண்டேன். முகம் சிவந்து அழுகை நிற்கவில்லை. இப்படி அழவிடக் கூடாது என்று முன்பே டாக்டர் கூறியிருந்தார். எனவே, சமாதானம் செய்யும் நோக்கில், "அழக் கூடாது. நீ நல்ல பாப்பா. உனக்குப் புதிய சாக்லேட் ஒன்று வாங்கித் தரப் போகிறேன். அம்மாவிற்குக் கிடையாது. உனக்கு மட்டும்தான்" என்று கூறி தோளில் போட்டுத் தட்டியவண்ணம் அடுத்த தெருவில் உள்ள பெட்டிக்கடை போன்ற சிறிய கடைக்குச் சென்றேன். பாப்பாவின் கேவல் குறையவில்லை.

வழியெல்லாம் அவள் அழுகையை நிறுத்த வேடிக்கைக் காட்டிக் கொண்டே சென்றேன்.

சோட்டா பாய் கடை என்று எல்லோரும் அழைக்கும் அந்தக் கடையை நோக்கிச் சென்றேன். கும்பல் எதுவுமில்லை. கடைக்காரர் ஏதோ இந்திப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு வாங்க என்றார். "இரண்டு நாட்களாய்க் கடை திறக்கவில்லையே, ஏதாவது வீட்டில் விசேஷமா?" என்று கேட்டு வைத்தேன்.

"இல்லைங்க, வடக்கே சொந்தவூருக்குப் போயிருந்தேன்" என்றார்.

"அவ்வளவு தொலைவிலிருந்து வந்தா இங்குக் கடை வைத்திருக்கிறீர்கள்!" என்றேன் வியப்புடன்.

"கடை வைப்பதற்காக இங்கு (புதுச்சேரிக்கு) வரவில்லை. மதருக்காக வந்தேன்" என்றார். அவ்வளவுதான் என் சைத்திய புருஷன் விழித்துக் கொண்டது.

"மதருக்காகவா வந்தீர்கள்? மதர் தெரியுமா?" என்றேன் ஆவல் மேலிட. என்னை நான் அன்னை அன்பன் என்று நினைத்துக் கொள்வேன். மதர் மிகவும் பிடிக்கும். அதற்காக என் சுபாவத்தை மாற்றிக் கொண்டதில்லை. யாராவது அன்னையை பிடிக்கும் என்றால் எனக்கு அவரைப் பிடிக்கும்.

“தெரியும்” என்றார். சற்று வயதானவராய் இருந்ததால், “நீங்கள் அன்னையை தரிசித்தது உண்டா?” என்றேன்.

‘‘ஆம், தரிசித்திருக்கிறேன்’’ என்றார். ‘‘பால்கனி தரிசனத்தின்போதா?” என்றேன் ஆர்வ மிகுதியால்.

‘‘நேரில் தரிசித்திருக்கிறேன். என் தலையில் அவர் திருக்கரங்களால் பல முறை ஆசி பெற்றிருக்கிறேன்” என்றார். என் ஆர்வம் கூடியது. எத்தனை பேறு பெற்றவர் இவர் என்று என் மனம் சந்தோஷப்பட்டது.

அதற்குள் ஒருவர் வந்து “ஒரு சிகரெட் பாக்கெட் தாருங்கள்” என்று, ஒரு செல்வர் புகைக்கும் உயர்தர சிகரெட்டின் பெயரைக் கூறினார்.

“இல்லீங்க” என்றார்.

வந்தவர் ஏமாற்றமிகுதியால், “என்ன கடையய்யா இது? சிகரெட் இல்லாத கடை ஒரு கடையா? எல்லா சிகரெட்டுமா விற்றுவிட்டது?” என்றார்.

“இல்லீங்க. சிகரெட் வியாபாரமே நம்ம கடையில இல்லைங்க” என்றார்.

“சரிதான்” என்று வந்தவர் அலுப்புடன் சென்றுவிட்டார்.

எனக்கு ஒரே ஆச்சர்யம். “என்னங்க இது? சிகரெட்தான் சின்னக் கடையில் அதிகப் பணம் ஈட்டித் தரும். அது இங்கு விற்பனையில்லை என்றால் எப்படி நிறைய சம்பாதிப்பீங்க? உங்களுக்குச் சிகரெட் என்றாலே பிடிக்காதா? அதானால்தான் கடையில் விற்கவில்லையா?” என்றேன்.

“அப்படியில்லீங்க. இளம் வயசுல எனக்குச் சிகரெட் ரொம்பப் புடிக்கும். சொன்னா நம்பமாட்டீங்க. ஒரு நாளைக்கு 100 சிகரெட்கூட பிடிப்பேன்” என்றார்.

‘‘ஐயய்யோ, அத்தனை சிகரெட் புகைத்தால் உடம்பிற்கு என்னவாகும்? உங்கள் மனைவி கூறினார் என்று சிகரெட் பிடிப்பதை



விட்டுவிட்டீர்களா?’’ என்றேன். (என் மனைவி கூறி நான் நிறுத்தவில்லை என்பது இங்கு நினைவுகூறத் தக்கது).

“மனைவியா? நான் திருமணமே செய்து கொள்ளவில்லை” என்றார்.

(அவருக்கு இப்போது ஐம்பது வயதாவது இருக்கும். ஏனென்று கேட்க ஆவல். கேட்கலாமா என்று தயக்கம்).

“பிறகு எப்படிச் சிகரெட் புகைப்பதை விட்டீர்கள்?” என்று கேட்டுவிட்டேன்.

“சொல்பவர் சொன்னதால் விட்டு விட்டேன்” என்றார்.

எனக்குச் சுவாரஸ்யமாயிற்று. மேலே கடைக்காரர் இருக்கைக்குப் பின்னால் சிறிய திருவுருவப் படம் மிகப் பழமையானது. என் மகள் அதைப் பார்த்துவிட்டாள். ‘‘அப்பா அதோ மதர் இருக்காங்கப்பா” என்று ஆர்வக் குரல் கொடுக்க, நானும் மகிழ்வுடன் பார்த்தேன். குழந்தை அழுகையை மறந்துவிட்டாள். நான் கடைக்காரர் சொல்லாமல் விட்டதை மறக்கவில்லை.

‘‘உங்க அம்மா சொன்னாங்கன்னு சிகரெட்டை விட்டுட்டீங்களா?” என்றேன்.

“ஆமாம். அம்மாதான் சொன்னாங்க. அதுவொரு சுவையான நிகழ்ச்சி. அந்தச் சொற்கள் சாவித்ரி காப்பியத்திற்கு ஒப்பானது” என்றார்.

“என்ன சொல்கிறீர்கள்?” என்றேன் ஒன்றும் புரியாமல்.

“ஆமாம், அந்த நாட்களில் நான் அன்னையின் அறையில் சேவை செய்யும் பேறு பெற்றிருந்தேன். அப்போது திடீரென்று அன்னை என்னை அழைத்து, “நீ சிகரெட் புகைப்பாயா?” என்று கேட்டார்.

நானும் உண்மை பேச வேண்டும் என்ற எண்ணத்தில் “ஆமாம்” என்று கூறினேன்.

“ஒரு நாளைக்கு எத்தனை சிகரெட் புகைப்பாய்?” என்றார்.

“சுமார் நூறு” என்றேன்.

“புகைப்பதை நீ விடாவிட்டால் நாளை நான் உன்னைப் பார்க்கமாட்டேன்” என்பதை (If you continue smoking I won't see you tomorrow) அழகிய ஆங்கிலத்தில் கூறினார்கள். அந்தச் சொற்கள் என் பொருட்டுப் பேசப்பட்டவை. என் மீது கொண்ட கருணையால் பேசப்பட்டவை. என்னை என்னவோ செய்தது. அந்தச் சொற்களின் வலிமையில் சிகரெட் ஆசை என்னை விட்டு ஓடிவிட்டது. கேவலம் சிகரெட்டிற்காக அன்னையை இழப்பதா? என்னால் முடியாது.

மறுநாள் உற்சாகத்துடன் சேவைக்குச் சென்ற என்னை அவர்தம் அறைவாயிலில் நின்று ஒரு புன்னகையுடன் பார்த்தார். அந்தக் காட்சி பசுமை மாறாமல் என்னுள்ளே இருக்கிறது” என்று கூறியவர் கண்கள் தாரைதாரையாய் கண்ணீர் பொழிந்தன. அதே கணம் அந்தக் கருணை மிகுந்த சொற்களை (If you continue smoking I won't see you tomorrow) என் செவிட்டுச் செவியிலும் கேட்டேன். திருமணமான புதிதில் இளம் மனைவியின் கூச்ச சுபாவத்தை ரசித்து அவள் முகத்தில் சிகரெட் புகையைப் பரவவிட்ட என் வக்கிர புத்தி இப்போது என்னை உறுத்தியது. அதன் பிறகு பாப்பா பிறந்தவுடன், என் மனைவி, “வெளியே எங்காவது போய் சிகரெட் புகையுங்கள். வீட்டிற்குள் வேண்டாம். புகை பிடித்தபின் வாயைக் கழுவாமல் பாப்பாவை முத்தமிடக் கூடாது” என்று கண்டிப்பாய்க் கூறினாள். அப்போதெல்லாம் அகந்தை அடிபட்டு ஆத்திரம் எழும். ஆனால் இப்போது இந்தக் கணம் அன்னையின் அருளுரை I won't see you tomorrow என்னைத் திருத்தியது.

என் மகள் கடைக்காரரைப் பார்த்து, “மாமா, அழாதீங்க, சாக்லேட் தாங்க” என்று தன் அழுகையை மறந்து மகிழ்வானாள். குழந்தையின் அழுகையை நிறுத்த வந்தேன். வந்த இடத்தில் அன்னையின் கருணைமிகு குரல் கேட்டேன். பரவசமானேன். வீடு திரும்பும் வழியில் மறக்காமல் பாக்கெட்டில் வைத்திருந்த சிகரெட் டப்பாவைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுப் போனேன்.



என் மனைவி, பாப்பாவை அடித்துவிட்ட தன் பொறுமை-யின்மையை உணர்ந்து எங்களிடம் மன்னிப்பு வேண்ட வாசலில் காத்துக் கொண்டிருந்தாள். நாங்கள் படியேறியதும், “பாப்பா, சாரிடா. அம்மா தெரியாமல் அடித்துவிட்டேனடா. இனிமேல் அடிக்கமாட்டேன். வாடா என் செல்லம்” என்று குழந்தையை வாங்கிக் கொண்டாள். குழந்தை அம்மாவின் அன்பில் திளைத்து மகிழ்ந்தது. அன்னை வந்தவுடன் சூழல் சுமுகமாயிற்று.

முக்கியமான ஒரு நிகழ்ச்சியைக் கூறி முடித்துவிடுகிறேன். என் துணிகளை வாஷிங்மெஷினில் போடும்போதெல்லாம் என் பாண்ட் பாக்கெட்டிலிருந்து சிகரெட் டப்பாவையும், லைட்டரையும் எரிச்சலுடன் எடுத்து வைக்கும் என் மனைவி பழக்கங் காரணமாய் பாக்கெட்டைத் துழாவ அதில் ஒன்றுமில்லாது திகைத்தாள்.

“என்ன தேடுகிறாய்? என் நண்பனை (சிகரெட்டை)யா? அவன் கெட்ட சகவாசத்தை விட்டுவிட்டேன்” என்றேன்.

“அப்படியா? யார் சொல்லி இதைச் செய்தீர்கள்? தெரிந்தால் அந்தப் புண்ணியாத்மாவை நன்றியுடன் நமஸ்கரிப்பேன்” என்றாள் மகிழ்ச்சி பொங்க.

“சொல்பவர் சொன்னதால்” என்றேன்.

“புரியவில்லை” என்றாள். அவள் கையைப் பற்றி அழைத்து வந்து பாப்பா சுவரில் ஒட்டி வைத்திருக்கும் கருணை தவழும் கண்களுடன் எங்களைப் பார்க்கும் ஸ்ரீ அன்னையைக் காட்டினேன்.

என் மனைவி நன்றியுடன் நமஸ்கரித்து நெகிழ்ந்து போனாள்.

*முற்றும்.*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***நான் என் சூழலின் மறுபுறமா, எதிர்புறமா?***

# Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 1)

N. அசோகன்

Infinity என்ற கருத்து நம்முடைய வாழ்க்கையில் பல இடங்களில் சம்பந்தப்படக்கூடிய ஒரு கருத்தாகும். ஆன்மீகத்திலும், தத்துவத்திலும் மற்றும் விஞ்ஞானம், கணிதம் என்ற பல துறைகளில் Infinity என்ற இந்தக் கருத்து பயன்படுகிறது. இதை வெறும் தியரிட்டிக்கல் கருத்தாக விஞ்ஞானத்திலும், தத்துவத்திலும் பயன்படுத்திக் கொண்டிருந்தால் அது நம் நடைமுறை வாழ்க்கைக்கு உதவாது. நம் நடைமுறை வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கும், நம்முடைய சாதிக்கும் திறனை அதிகரித்துக் கொள்வதற்கும் இந்த Infinity என்ற கருத்தை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

Infinityஐ நம் நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வருவதற்குப் பகவானும், அன்னையும் வகுத்துக் கொடுத்த பூரணயோக நெறி முறைகள் மிகவும் உதவியாக இருக்கும். முதலில் Infinity என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். Infinity என்றால் வரம்போ, முடிவோ இல்லாத நிலையைக் குறிக்கிறது. அதாவது ஒரு ஆரம்பமோ, முடிவோ இல்லாத நிலையை Infinite condition என்கிறோம். இந்த Infinity காலத்திற்கும் பொருந்தும், இடத்திற்கும் பொருந்தும். உதாரணமாகப் பிரபஞ்சத்தை அளவில் Infinity என்று விஞ்ஞானம் வர்ணிக்கிறது. அதாவது பிரபஞ்சம் இங்கேதான் தொடங்குகிறது, இங்கேதான் முடிகிறது என்று நாம் ஒரு ஆரம்பத்தையோ, முடிவையோ காட்ட முடியாது. எவ்வளவு பெரிய telescopeஐ வைத்துப் பார்த்தாலும் அது விரிந்து கொண்டே போகிறது, முடிவே தெரியவில்லை என்று தான் விஞ்ஞானிகள்



சொல்கிறார்கள். இட அளவில் பிரபஞ்சம் Infinityஆக இருப்பது போல் கால அளவிலும் அதற்கு ஒரு ஆரம்பமோ, முடிவோ கிடையாது. அதாவது, பிரபஞ்சம் இந்தக் கால கட்டத்தில்தான் தொடங்கியது என்றோ, இந்தக் கால கட்டத்தில்தான் பிரபஞ்சத்தின் ஆயுள் முடிகிறது என்றோ நாம் எதையுமே குறிப்பிட்டுக் காட்ட முடியாது. ஆனால் நம்முடைய வாழ்க்கையில் மற்ற எல்லாவற்றையும் பார்த்தால் இடம் மற்றும் வடிவ ரீதியாகவும் சரி, கால ரீதியாகவும் சரி எல்லாவற்றிற்கும் வரையறைகள் உண்டு. ஆரம்பமும் முடிவும் உண்டு. உதாரணமாக பூமி நமக்குப் பிரம்மாண்டமாகத் தெரிகிறது. ஆனால் அதனுடைய சுற்றளவிற்கு ஒரு Infinity உண்டு. அதாவது 24091 மைல் 38545 Km. இவ்வளவுதான் பூமியினுடைய சுற்றளவு என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அம்மாதிரியே பூமியினுடைய வயதை 4540 கோடி வருடங்கள் என்று கணக்கிட்டுள்ளார்கள். கடல் நம் பார்வைக்குப் பிரம்மாண்டமாக தெரிந்தாலும் அதற்கும் ஒரு எல்லையும் அளவும் உண்டு. கவிஞர்கள் இமயமலை போன்ற மலைகளை வானளாவிய உயர்ந்த மலைகள் என்று வர்ணிப்பதுண்டு. ஆனால் இமயமலையின் உச்சிக்கும் ஒரு வரம்பு உண்டு. எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை 27,000 அடி என்று கணக்கிட்டுள்ளார்கள். இம்மாதிரியே உலகத்தில் வாழும் எல்லா ஜீவராசிகளுக்கும் அதாவது செடி, கொடிகள், மரங்கள், பிராணிகள் மற்றும் மனிதன் உட்பட முடிவில்லா ஆயுள் எதற்கும், எவர்க்கும் கிடையாது. பெரும்பாலானவர்களுடைய ஆயுள் 100 வயது எட்டுவதற்குள்ளேயே முடிந்து விடுகிறது. 100ஐ தாண்டிப் போகின்றவர்கள் குறைவு.

Infinity என்பது வரம்பற்ற ஒரு நிலை என்பதை நாம் ஏற்றுக் கொள்ளும்பட்சத்தில் அதனுடைய அடுத்த சிறப்பம்சமாக Infinityயின் குணாதிசயங்களை உணர்ந்த மேதைகள் என்ன சொல்கிறார்கள் என்றால், நாம் கூட்டினாலும் சரி, கழித்தாலும் சரி, பெருக்கினாலும் சரி, வகுத்தாலும் சரி, Infinityஆக இருக்கின்ற எந்த ஒரு விஷயமும் அதிகரிக்கவும் செய்யாது, குறையவும் செய்யாது என்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு நிலையை நம்மால் கற்பனை செய்வது கூட கடினம். நம்மிடம் பத்தாயிரம் ரூபாய் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதோடு 2000 சேர்த்தால் அது 12,000மாகும். ரூ.2000 எடுத்து செலவு செய்தால் எட்டாயிரமாகக் குறையும். 3 மடங்கு பெருகினால் 30,000மாகும். நாலு பேருக்குச் சமமாகப் பிரித்துக் கொடுத்தால் தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் 2500தான் கிடைக்கும். ஆக பணம் என்று எடுத்துக் கொண்டால் இப்படி அது கூடுவதையும் குறைவதையும் நாம் கண்ணால் பார்க்கிறோம். நம்முடைய அறிவை எடுத்துக் கொண்டால் +2 படித்த மாணவன் ஒருவன் கல்லூரிக்கு மேற்படிப்புக்குச் சென்றான் என்றால் அவன் அறிவு வளரும். ஆனால் அதே சமயத்தில் தன்னுடைய அறிவை நாலு பேரோடு பகிர்ந்து கொண்டான் என்றால் அதனால் அது குறையாது. நாலு பேரோடு நம்முடைய பணத்தைப் பகிர்ந்தால் அது குறைகிறது. ஆனால் எத்தனை பேரோடு நம்முடைய அறிவைப் பகிர்ந்தாலும் அது குறையாது. அதாவது நம்முடைய அறிவு என்பது பணத்தைவிட Infinity தன்மை அதிகம் கொண்டதாக இருக்கிறது. இப்படி அறிவைக் கூட்டினால் அது வளர்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இப்படி எவ்வளவு தான் கூட்டினாலும் நம்மால் அதனுடைய அளவை அதிகரிக்க முடியாது என்ற நிலையில் ஒன்று இருக்கிறது என்றால் அதை நம்மால் புரிந்து கொள்ள முடியுமா? அது தான் Infinity. இப்படிப்பட்ட Infinity நிலையில் இறைவன் ஒருவன் தான் இருக்கிறான். இறை ஜீவியத்தை நம்மால் கூட்டவும் முடியாது, குறைக்கவும் முடியாது, பெருக்கவும் முடியாது, வகுக்கவும் முடியாது. இப்படிப்பட்ட சிறப்புக் கொண்ட வேறு எந்த விஷயத்தையும் நம்முடைய பூவுலகிலோ, இயற்கையிலோ, சமூகத்திலோ, அல்லது நம்முடைய அன்றாட வாழ்க்கையிலோ நம்மால் பார்க்க முடிவதில்லை என்பதால் Infinityயினுடைய இப்படிப்பட்ட சிறப்பம்சத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது.

ஆனால் பகவான் மற்றும் அன்னையும் என்ன சொல்கிறார்கள்



என்றால் ஆன்மா Infinityஆகவும் வரம்பற்றதாகவும் இருக்கிறது என்கிறார்கள். அதாவது அளவிலும் சரி, அதனுடைய ஆற்றலிலும் சரி, அது அளவு கடந்ததாகத்தான் இருக்கிறது. இந்த அளவுகடந்த தன்மை என்பது ஆன்மாவினுடைய முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்றாகும். சச்சிதானந்தம் என்பது ஒரு உயர்ந்த ஆன்மீக நிலை. சச்சிதானந்தத்தில் மூன்றாவது அம்சமாக இருப்பது ஆனந்தம். இந்த ஆனந்தம் எப்படி வந்திருக்கிறது என்பதற்குப் பகவான் விளக்கம் கொடுத்திருக்கிறார். ஆன்மாவினுடைய வரம்பற்ற நிலை எதற்கும் கட்டுப்படாத ஒரு வரம்பற்ற சுதந்திரத்தை வழங்கியிருக்கிறது என்று சொல்கிறார். அந்தச் சுதந்திரம்தான் அந்த ஆனந்தத்தை வழங்கியிருக்கிறது என்று சொல்கிறார். அவர் சொல்வதைப் பார்த்தால் Infinityயினுடைய objective expression அதாவது வெளி வெளிப்பாடு சுதந்திரமாகவும் அதே சமயத்தில் subjective expression அதாவது உள் வெளிப்பாடு ஆனந்தமாகவும் தெரிகிறது என்கிறார்.

அளவு கடந்த சுதந்திரம் ஏன் அளவு கடந்த ஆனந்தத்தை தருகிறது என்று புரிந்து கொள்ள வேண்டுமென்றால் நம்முடைய சுதந்திரம் எந்த நிலையில் இருக்கிறது, அதனால் நம் சந்தோஷம் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறது என்பதை இறைவனுடைய சுதந்திரத்தோடும், சந்தோஷத்தோடும் ஒப்பிட்டுப் பார்த்தால்தான் தெரியும். பூவுலகில் பிறக்கின்ற எந்த ஒரு மனிதனுக்கும் முழுச் சுதந்திரம் கிடையாது. அவன் பிறந்த நாள் முதல் கண்ணை மூடும் இறுதி நாள் வரையிலும் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் செயல்பட வேண்டும். இந்த எண்ணற்ற கட்டுப்பாடுகளும், வரம்புகளும் நம்முடைய சுதந்திரத்தைப் பெருமளவு குறைத்து விடுகின்றன. நம்முடைய உடம்பின் தேவைகளை நாம் மீறி நடக்க முடியாது. நேரத்திற்குச் சாப்பிடாவிட்டால் நாம் வேலை செய்வதற்கு உடம்பில் தெம்பிருக்காது. சிறுவர், சிறுமியராய் இருக்கின்ற அந்தப் பள்ளிப் பருவத்தில் அவர்கள் இஷ்டம் போல விளையாடிக் கொண்டிருக்க

முடியாது. தினமும் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்று குடும்பமும் சமூகமும் நிர்பந்தப்படுத்துகிறது. 20 வயதிற்கு மேல் ஆகிவிட்டால் ஆண்களுக்கும் சரி, பெண்களுக்கும் சரி அந்த வயதிற்கு உண்டான பல்வேறு நிர்பந்தங்களைச் சமூகம் திணிக்கிறது. ஆணாக இருந்தால் அவன் ஒரு வேலை தேடிக் கொண்டு உழைத்துச் சம்பாதிக்க வேண்டும். வேலை செய்ய இஷ்டமில்லை, சும்மா இருக்க விரும்புகிறேன் என்று சொன்னாலும் சமூகம் அவரைச் சும்மா விடுவதில்லை. ஆனால் ஆண்டவனை இப்படி யாரும் நிர்பந்தப்படுத்த முடியாது. அவர் இஷ்டப்பட்டால் வேலை செய்வார், இல்லாவிட்டால் அவர் அமைதியாக இருப்பார். அவரைக் கேள்வி கேட்பதற்கு யாருமில்லை. ஆண்களுக்கு இருக்கின்ற சொற்ப சுதந்திரம் கூட பெண்களுக்குக் கிடையாது. பெண்கள் விரும்புகிறார்களோ இல்லையோ கல்யாண வயதை எட்டிவிட்டால் அவர்கள் கல்யாணம் பண்ணிக் கொண்டுதான் ஆக வேண்டும் என்ற இடத்தில் சமூகம் அவர்களை வைத்திருக்கிறது. திருமண வாழ்க்கையில் எனக்கு நாட்டமில்லை, ஆன்மீகத்தில் தான் ஈடுபாடு இருக்கிறது என்று சொல்லும் பெண்களை, அப்பெண்களின் குடும்பத்தால் சுதந்திரமாகச் செயல்பட விட முடிவதில்லை. ஆக, பெண் என்றால் திருமணமாகி, ஓரிரு குழந்தைகளுக்குத் தாயாகி, அதற்குப் பிறகு பேரப்பிள்ளைகளைப் பார்த்துவிட்டுத்தான் கண்ணை மூட வேண்டும் என்ற பெரிய கட்டுப்பாட்டிற்குள்தான் பெண்கள் சமுதாயம் இருக்கிறது.

திருமணம் ஒரு பெரிய கட்டுப்பாடு என்றால், வருமானம் அது தனக்கே உண்டான பல்வேறு கட்டுப்பாடுகளை நம்மேல் திணிக்கிறது. தான் விரும்புகின்ற வருமானத்தைப் பார்ப்பவர்களே மிகவும் குறைவு. மனதில் இலட்ச ரூபாய் வருமானம் இருக்கும் பொழுது கையில் 10,000 அல்லது 15,000 வருமானத்தைப் பார்ப்பவர்கள் தான் அதிகம். தான் ஆசைப்படுகின்ற வருமானம் கிடைக்காதபட்சத்தில் தான் விரும்புகின்ற மாதிரியெல்லாம் செலவு செய்ய எவராலும் முடியாது.



தனக்கு என்ன வருமானமோ அதற்குண்டான செலவைத் தான் ஒருவரால் செய்து கொள்ள முடியும். கார் வைத்துக் கொள்ள ஆசையாக உள்ளது, ஆனால் இருக்கின்ற வருமானத்தில் two wheeler தான் வைத்துக் கொள்ள முடியும் என்றால் அப்படிப்பட்ட நிலையில் உள்ள மனிதர் காரை மறந்துவிட்டு two wheelerல் தான் போகப் பழகிக் கொள்ள வேண்டும்.

திருமணம் சில கட்டுப்பாடுகளை விதிக்கிறது. வருமானம் சில நிர்பந்தங்களைத் திணிக்கிறது என்றால், குடும்ப வாழ்க்கையும் சமூக வாழ்க்கையும் மேலும் சில நிர்பந்தங்களை விதிக்கின்றன. பிள்ளைகளாக இருந்தால் பெற்றோர்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். இளம் பிள்ளைகள் அவர்கள் இஷ்டப்படி எல்லாம் பெற்றோருக்கு அடங்கியிருக்காமல் செயல்பட முடியாது. திருமணமான பல பெண்கள் கணவனுடைய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுத்தான் குடும்பம் நடத்த முடியும். அவர்கள் இஷ்டப்படியெல்லாம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாது. வேலை செய்கின்ற ஒரு ஆண்மகனுக்கு அவனுக்கு மேல் ஒரு மேலதிகாரி இருந்தால் அவர் சொல்லுகின்றபடிதான் வேலை செய்ய வேண்டுமே ஒழிய, இவர் இஷ்டப்படி வேலை செய்ய முடியாது. அரசாங்கத்தின் சட்ட திட்டங்களையும் குடிமக்களால் மீறவும் முடியாது. Licence வாங்காமல் வண்டி ஓட்ட முடியாது, கட்ட வேண்டிய வரிகளைக் கட்டாமல் இருக்க முடியாது, Town Planning Authorityஐ மீறி நம் இஷ்டத்திற்கு வீடு கட்டிக் கொள்ள முடியாது. Traffic விதிமுறைகளை மதிக்காமல் நம் இஷ்டம் போல் வாகனம் ஓட்டவும் முடியாது. இப்படிக் குடும்பம், சமூகம், வேலை, வருமானம், அரசாங்கம் என்று எல்லாம் ஒன்று சேர்ந்து பல்வேறு நிர்பந்தங்களை உண்டுபண்ணி அவரவருக்கு இருக்கின்ற சுதந்திரத்தைப் பெருமளவு குறைத்து விடுகின்றன. சுதந்திரம் எந்த அளவு குறைகிறதோ அந்த அளவு நம் சந்தோஷம் குறைந்து விடுகிறது. விளையாட விரும்புகின்ற பிள்ளைகளை home work போடச் சொன்னால் அவர்களுக்கு

வருத்தம் வருகிறது. அதிக வருமானம் பார்க்க விரும்புகிறவருக்குக் குறைந்த வருமானம் வரும்பொழுது அவர் சுருங்கிப் போகிறார். தனக்குப் பிடிக்காத வேலையை மேலதிகாரி செய்யச் சொன்னால் அந்த இடத்தில் சங்கடம் வருகிறது. நிறைய வருமானம் பார்க்கிறவர்களை அதற்கேற்றபடி வருமானவரி கட்டச் சொன்னால் அவர்கள் அழுகிறார்கள்.

ஆனால் இப்படி நினைத்துப் பாருங்கள். யாருக்கும் எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த நிர்ப்பந்தமும் இல்லை, இஷ்டம் போல இருக்கலாம், யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை. இப்படி ஒரு பூரண சுதந்திரம் நமக்குக் கிடைத்தால் நாம் எவ்வளவு சந்தோஷமாக இருப்போம் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். வேலை செய்கிறோமோ இல்லையோ வேண்டிய வருமானம் கிடைக்கும், யாரும் எதற்கும் நம்மை எந்தக் கேள்வியும் கேட்க மாட்டார்கள், இஷ்டப்பட்டால் வேலை செய்யலாம், விரும்பினால் திருமணம், இல்லாவிட்டால் சுதந்திரப் பறவையாக இருக்கலாம், வரி கட்டாமலோ, லைசன்ஸ் வாங்காமலோ விதிமுறைகளைப் பின்பற்றாமல் இருந்தாலோ எவரும் கேட்க மாட்டார்கள் என்று இப்படி ஒரு சுதந்திரம் நமக்குக் கிடைத்தது என்றால் நாம் எப்படி மலர்ந்து போவோம் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். வாழ்க்கையில் ஒரே ஒரு நாள் இப்படி ஒரு சுதந்திரத்தை அனுபவித்தாலும் நாம் வாழ்நாள் முழுவதும் அதை நினைவில் வைத்திருப்போம். ஆனால் ஒரு நாள் கூட இப்படி இருப்பதற்குச் சமூகம் எவரையும் அனுமதிப்பதில்லை. அதனால் மனிதன் சுருங்கிப்போயிருக்கிறான். இறைவனுக்கு இப்படி எந்த நிர்பந்தமும் இல்லை என்பதால் அவர் எந்நேரமும் இந்த வரம்பற்ற சுதந்திரத்தின் காரணமாக பேரானந்தத்தில் இருக்கிறார்.

ஆன்மாவினுடைய வரம்பற்ற தன்மை சத்திய ஜீவிய அளவில் தெளிவாக வெளிப்படுகிறது. ஏனென்றால் சத்திய ஜீவிய நிலையே பகவானால் ஆங்கிலத்தில் Infinite Truth Consciousness என்று



வர்ணிக்கப்பட்டுள்ளது. சத்திய ஜீவியத்திற்குக் கீழே படிப்படியாக இறங்கி வந்தால் அடுத்தடுத்து கீழே உள்ள நிலைகள் இந்த Infinityஐச் சத்திய ஜீவியத்தை விட குறைந்த அளவிலேயே வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக சத்திய ஜீவியத்திற்கு அடுத்த கீழ் நிலையில் உள்ளது Overmind ஆகும். நாம் வழிபடுகின்ற பெருங்கடவுள்கள் பரமசிவன், மகாவிஷ்ணு, கிருஷ்ண பகவான் ஆகியோர் இந்த நிலையில்தான் இருக்கிறார்கள். சத்திய ஜீவியத்திற்குண்டான முழுமையான அறிவோ மற்றும் அதே அளவிற்கான Infinite Nature இவர்களுக்கு இல்லை. ஆனால் Overmindக்குக் கீழேயுள்ள Human mindஉடன் ஒப்பிடும் பொழுது Overmindஉடைய capacity for Infinity அதிகம். நம் கண்ணிற்கு நம் கண் பார்வை எட்டும் அளவிற்குத்தான் வெளி உலகம் தெரியும். ஆனால் மகாபாரதத்தில் நாம் என்ன கேள்விப்படுகிறோம் என்றால் கிருஷ்ண பகவான் விஸ்வரூபம் எடுத்தபொழுது பிரபஞ்சமே அந்த விஸ்வரூபத்திற்குள் அடங்கியிருந்ததை அர்ஜுனன் பார்த்தான். இப்படி உலகம் முழுவதும் நம் கண் பார்வைக்குத் தெரிவதற்கு வாய்ப்பேயில்லை. நாம் நம் வீட்டு மாடியில் நின்று வெளியில் பார்த்தால் நம் தெருவில் உள்ள மற்ற கட்டடங்கள் நம் கண்ணில் படலாம். ஆனால் அடுத்த தெருவில் உள்ள கட்டடங்களோ அல்லது அதற்கும் அடுத்த தெருவில் உள்ள கட்டடங்கள் நம் கண்ணில் படுமா என்பது சந்தேகம். கடவுளான கிருஷ்ண பகவானுடைய பார்வை வரம்பற்றது. மனிதனான நம் பார்வை மிகவும் குறுகியது. இம்மாதிரியே Human mindஐ எடுத்துக் கொண்டால் Overmindக்குக் கீழே இருக்கிறது. ஆனால் vital plane என்று சொல்லப்படுகின்ற உணர்ச்சி நிலைக்கு மேலே இருக்கிறது. Overmindஉடன் ஒப்பிடும் பொழுது இதனுடைய capacity for Infinity குறைவு. அதாவது கடவுள்களுக்கு இருக்கின்ற முழுமையான அறிவு மனிதனுக்கு இல்லை. அவனுடைய தேவைக்கு

ஏற்ற அறிவு தான் அவனுக்குள்ளது. அதாவது பாண்டவருக்கும் கௌரவருக்கும் இடையே இருந்த அரசாங்க தகராற்றை எப்படித் தீர்ப்பது மற்றும் அந்தக் குருக்ஷேத்திரப் போரை எப்படி நடத்துவது என்று கிருஷ்ண பகவானுக்கு இருந்த அறிவு பாண்டவரில் மூத்தவரான தர்மபுத்திரருக்கு இல்லை. கிருஷ்ண பகவான் தர்மபுத்திரரிடம் சொல்கிறார், "எனக்குத் தெரிந்த பஞ்சாங்கத்தின்படி 12 வருட வனவாசத்தை 12 நாளில் முடித்துக் கொள்ளலாமா, சம்மதமா?" என்று கேட்கிறார். ஆனால் தர்மபுத்திரரோ அலறி, "அதெப்படி 12 வருடங்களை 12 நாளில் கழிப்பது? உங்கள் பஞ்சாங்கம் எனக்குப் புரியவில்லை. எனக்குத் தெரிந்த வகையில் 12 வருட வனவாசத்தை அதற்குரிய அளவிற்கு நான் அனுபவிக்கிறேன்" என்று பதிலளித்தார். தெய்வத்தினுடைய வரம்பற்ற பார்வைக்கும் மனிதனுடைய குறுகிய பார்வைக்கும் இப்படி மலைக்கும் மடுவுக்கும் உள்ளது போல் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

*தொடரும்....*

❃❃❃

**ஜீவிய மணி**

**பிரியமாக வாங்கிக் கொண்டவன் கையை ஓங்கத் தவறியதில்லை.**

**மனச்சாட்சி என்பது மனம் சௌகரியத்திற்குச் சொல்லும் சாட்சி.**

**உயர்ந்தவனையும், உயர வேண்டியவனையும் சமூகம் ஒதுக்குகிறது.**

***உயர்வு ஒதுக்கப்படும்.***

**மனம் தவறவிட்டவை மனக்கண் முன் எழும்.**

**தேடிப் போனவை நாடி வருகின்றன.**



# முன்னேற்றம் என்பது புதிய சிந்தனை

க. பழனித்துரை

ஒரு கிராமத்தில் ஓர் இளைஞர் மிகப்பெரிய பணக்காரர் ஆனார். அவர் வம்சத்தில் யாருமே அப்படிச் செல்வம் சேர்த்தது கிடையாது. அவர் பாரம்பரியமே ஏழ்மையில் வாழ்ந்து வந்தது. இந்தப் புதிய பணக்காரரின் தந்தையும் கூட இரண்டு, மூன்று மாடுகளை மேய்த்து, அரை ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்து, வாய்க்கும் கைக்குமாக வாழ்ந்து வந்தவர்தான். ஆனால் இந்த இளைஞர் பணக்காரர் ஆனவுடன் அந்த ஊரில் பலர் 'இவருக்கு யோகமப்பா' என்றுதான் கூறி வந்தார்கள். ஆனால் இவர் எப்படி செல்வந்தராக மாறினார் என்பதைக் கூர்ந்து பார்க்கவில்லை. இந்த மனிதர் ஒரு தொழிற்பயிற்சி நிறுவனத்தில் மின் வேலை செய்வதற்கான ஒரு பயிற்சியைப் பெற்று, ஒரு சான்றிதழ் பெற்று, அத்துடன் தனக்கிருந்த அரை ஏக்கர் நிலத்தைத் தன் தந்தையை வற்புறுத்தி விற்றுவிட்டு வெளிநாடு சென்றுவிட்டார். பத்து ஆண்டுகள் கழிந்தன. பத்தாண்டு கடின உழைப்பின் பிரதிபலன், ஊருக்கு வந்தார், தன் தாய், தந்தையர் தங்கி இருந்த உடைந்துபோன ஒரு கொட்டகையைப் பிரித்து எறிந்துவிட்டு முப்பது லட்ச ரூபாய்க்கு வீடு கட்டினார். அத்துடன் ஒரு கார் ஒன்றையும் வாங்கினார். இந்த இரண்டும் நடந்தவுடன் நல்ல குடும்பத்திலிருந்து அவருக்குப் பெண் தந்தனர். திருமணமாகியது. ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்த இவருக்குத் தன் முயற்சியாலும் உழைப்பாலும் உயர்ந்த காரணத்தால் ஒரு நல்ல குடும்பத்திலிருந்து பெண் கிடைத்ததால், அவரின் சமூக அந்தஸ்து உயர்ந்தது. இது எப்படி நடந்தது என்பது தான் முன்னேற்றத்தின் சூட்சுமம். பெரும்பாலானவர்கள் இந்த மாற்றங்களின் விதிகள் யாவை என்பதனைப் புரிந்து கொள்ளாமல்,

இவர் பெற்ற வெற்றிக்கு யோகம் என்று பெயர் சூட்டிவிட்டனர். உண்மையில் அவர் செய்தது ஒரு சாதனை. இந்தச் சாதனையைச் செய்ய பல அடிப்படை வேலைகளைச் செய்திருக்கிறார் அந்த மனிதர் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு சாதனைக்கும் பின்னால் பல சோதனைகள் மற்றும் வேதனைகள் இருக்கின்றன என்பதை நம்மில் பலர் புரிந்து கொள்வதில்லை.

வெளிநாட்டில் அவர் எலக்ட்ரீஷியன் (மின்வேலை) வேலை செய்ததால், அவருடைய வேலைகள் அனைத்தும் மரபு வழி பயன்படுத்திய உபகரணங்களை வைத்துச் செய்வது கிடையாது. வெளிநாட்டில் முதலில் அவர் கற்றுக் கொண்டது உலகத் தரமான கருவிகளை உபயோகப்படுத்தி மின் வேலைகள் செய்வதற்கு. எனவே தன் பத்து ஆண்டு காலப் பணியில் இந்தக் கருவிகளை உபயோகப்படுத்தியதன் விளைவு, நேர்த்தியான மின் வேலைகள் செய்வதற்கு அவர் நல்ல தகுதியைப் பெற்றிருந்தார். இதன் விளைவு பத்தாண்டு உழைப்பும் மிகப்பெரிய அளவிற்குச் செல்வம் சேர்ப்பதற்கு உதவியது. பத்தாண்டுகளுக்குப் பிறகு ஊர் திரும்பிய போது முதல் தரமான ஜெர்மானிய கம்பெனி தயாரித்த கருவிகளைக் கொண்டு வந்திருந்தார். மீண்டும் வெளிநாடு செல்ல அவர் விரும்பவில்லை. ஏன் என்றால், இந்தியாவிலும் அதிகம் சம்பாதிக்க வாய்ப்பிருப்பதாகவே அவர் கருதினார். எனவே, முதலில் தனக்குத் தெரிந்த ஒரு திறமையை வைத்துக் கொண்டு ஒரு நல்ல மதிக்கத் தகுந்த வாழ்க்கையை வாழ்வது எப்படி என்பது பற்றி யோசிக்கத் தொடங்கினார். உடனே கிராமங்களில் எப்படி மின் வேலைகள் நடைபெறுகின்றன, எப்படி இந்த மின் வேலைகள் செய்வோர் வாழ்க்கை இருக்கிறது, எப்படி வேலைப்பாட்டின் நேர்த்தி இருக்கிறது, இந்த வேலைகள் புதிதோ, பழையதோ, எப்படி எந்த அமைப்புக்கள் மூலம் செய்யப்படுகிறது என்பதனை கிராமம் கிராமமாக சுற்றிப் பார்த்து மின் வேலை செய்வோர் மற்றும் வீடு கட்டுவோர், ஒப்பந்தக்காரர்கள் அனைவரிடமும் பேசி புள்ளிவிபரங்களையும்



கருத்துக்களையும் சேகரித்துக் கொண்டார். எனவே கிராமங்கள் பலவற்றில் கட்டப்பட்ட கட்டடங்களை, வேலை செய்யும் மின் வேலைக்காரர்கள், அவர்களின் வேலைகள் ஆகியவற்றைப் பார்த்துவிட்டு, ஒன்றைப் புரிந்து கொண்டார். கிராமங்களில் கட்டப்படும் வீடுகளுக்குத் தரமான எலக்ட்ரிகல் வேலை செய்வது இல்லை என்பதை உணர்ந்தார். அது மட்டுமல்ல, இந்தத் தொழிலில் ஈடுபட்ட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் நல்ல ஊதியம் கிடைக்கவில்லை என்பதையும் புரிந்து கொண்டார். அவர்கள் வாங்கும் சம்பளம் என்பதும் மிகப்பெரிய அளவில் அவர்கள் வாழ்க்கை மேம்பட பயன்படுவதாக இல்லை. வீட்டுக்காரர்களுக்கும் தரமான வேலை செய்ய நல்ல மின் வேலை செய்வோர் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, வீட்டுக்காரரின் தேவைகளும் பூர்த்தி செய்யப்படுவது இல்லை, குறித்த நேரத்தில் வேலைகளும் நடைபெறுவது இல்லை, தரமான மின் சாதனங்கள் பயன்படுத்தப்படுவதும் இல்லை என்பதைப் புரிந்து கொண்டார்.

இந்த அடிப்படைச் செய்திகளை வைத்துக் கொண்டு ஓர் உண்மையை புரிந்து கொண்டார். அதாவது, மக்களுக்குத் தரமான மின் வேலை செய்து தர ஆட்கள் தேவை. அதே நேரத்தில் மின் வேலை செய்யும் தொழிலாளிகள் இருக்கிறார்கள், அவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் வேலை செய்யும் திறன் இல்லை. இவர்களுக்குத் திறன் கூட்டப்பட்டுவிட்டால், நல்ல நேர்த்தியான வேலைகள் செய்து தந்தால், அதிகம் சம்பாதிக்கலாம். இதற்கு ஏதாவது ஒரு வகையில் அமைப்புகள் தேவை என்பதை உணர்ந்தார். அதனால், தன்னிடம் இருக்கும் கருவிகளை உபயோகப்படுத்தி வீடு கட்டுவோர்க்கு நேர்த்தியாக மேலை நாடுகளில் இருக்கும் வசதிகளை உருவாக்கித் தந்துவிட வேண்டும். அதே நேரத்தில் இந்தப் பணியில் இந்த எலக்ட்ரீஷியன்களுக்கும் நல்ல ஊதியம் கிடைக்க வேண்டும், தரமான வேலைகளும் நடைபெற வேண்டும், தனக்கும் ஒரு கணிசமான அளவுக்கு வருமானம் வர வேண்டும். இவை அனைத்தும்

நடைபெற என்ன செய்ய வேண்டும் என்று எண்ணியபோது ஓர் உண்மையினைக் கண்டுபிடித்தார். அதாவது தனியாக ஒரு வீட்டுக்காரரிடம் ஒரு எலக்ட்ரீஷியனை நேராக தொழிலுக்கு அனுமதிக்கும்போது ஒன்று, தொழிலாளியாக இருந்தால் வீட்டுக்காரர் ஏமாற்றப்படுவார்; வீட்டுக்காரராக இருந்தால் தொழிலாளி ஏமாற்றப்படுவார். இருவரும் ஒருவரையொருவர் ஏமாற்றாமல், இருவருக்கும் நிறைவு தரத்தக்க வேலை நடைபெற வேண்டுமானால், அதற்கு ஏதாவது ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அந்த அமைப்புத்தான் இருவரையும் பாதுகாக்கும். அது மட்டுமல்ல, இருவரும் தங்கள் மரியாதையைக் காத்துக் கொள்ள முடியும். அத்துடன், அமைப்புரீதியாகச் செயல்படும்போது அதன் வீச்சு, பலம், அதற்கான ஆதரவு, உதவிகள் அனைத்தும் மேம்பட்டவையாக இருக்கும். ஒரு தனி மனிதன் வங்கியில் கடன் கேட்பதற்கும், ஓர் அமைப்பு அல்லது நிறுவனம் கடன் கேட்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஓர் அமைப்பு என்பது பலரின் கூட்டு முயற்சி. எனவே அமைப்பிற்குக் கடன் கிடைப்பது எளிது. எனவே, ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு ஓர் அமைப்பை உருவாக்க எண்ணி பல்வேறு இடங்களுக்குச் சென்று, மின் பணியாற்றுகின்ற வேலை தெரிந்த, கற்றுக் கொண்டிருந்தவர்களைச் சந்தித்து ஓர் உறுதிமொழியைத் தந்தார். ‘‘அடுத்த மாதத்திலிருந்து உன் வருமானத்தை இரட்டிப்பாக்கித் தருகின்றேன். நீ செய்ய வேண்டியது ஒரு அமைப்பில் உறுப்பினராக வேண்டும். அடுத்து புதிய முறையில் உங்கள் தொழிலைச் செய்ய வேண்டும். அதற்கு நான் வழிவகை செய்கிறேன்” என்றார். வருமானத்தை இரட்டிப்பாக்க யார் மறுப்பார்கள். அவர் சந்தித்த எலக்ட்ரீஷியன் அனைவரும் சம்மதித்தனர். ஏன் சம்மதித்தனர் என்றால், சொன்னவர் சாதித்தவர் என்பது அனைவருக்கும் தெரிகிறது. எனவே அனைவரையும் தனியாகத் தொழில் செய்வதை நிறுத்தச் சொன்னார். அடுத்த மாதமே அனைவரும் தனியாக தொழிலுக்குச் செல்வதை நிறுத்திவிட்டனர்.



உடனே ஒரு நிறுவனத்தைத் தொடங்கினார். நிறுவனம் என்றால் என்ன? வேறொன்றும் இல்லை, ஒரு சிறிய அறை ஒரு நகரத்தில், அதற்கு ஒரு விலாசம், ஒரு தொலைபேசி எண், அந்த அலுவலகத் தொடர்புக்கு ஒரு ஆள் வேலை செய்ய, அவ்வளவுதான். அதுதான் அவர்களின் அமைப்பு. தன் நிறுவனத்திலிருந்து உத்தரவு வந்தால் வேலைக்குச் செல்வார்கள், தனியே அழைத்தால் அனைவரிடமும் நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளுங்கள் என்று கூறிவிடுவார்கள். அத்தனை மின் வேலை செய்வோரையும் தன் நிறுவனத்துடன் இணைத்துவிட்டார்.

மின் வேலை பார்ப்பதைத் தங்கள் நிறுவனம் சொன்னால் தான் வேலை பார்ப்பது. அவர்கள் எந்த வீட்டில் வேலை பார்த்தாலும், தங்களுக்கு வரும் சம்பளம் என்பதை தன் நிறுவனம் பெற்றுத் தர வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்திவிட்டனர். வெளிநாட்டில் வேலை செய்த அனுபவத்தால் வேலைகள், அதற்கான கூலி, இவைகளை இந்தத் தலைவர் எளிதாக நிர்ணயம் செய்துவிட்டார். செய்தது மட்டுமில்லாமல், இதற்கான பட்டியல் போட்டு அவைகளை அச்சடித்து வைத்துக் கொண்டார். தங்களுக்கென்று ஒரு அலுவலகம் ஒரு நகரத்தின் மையப்பகுதியில் உருவாக்கிக் கொண்டுவிட்டார். தாங்கள் வேலை பார்ப்பதற்கு வேலை பார்த்த வீடுகளில் கூலி வாங்குகிறோம் என்ற நிலையிலிருந்து மாதந்தோறும் கம்பெனி நமக்குச் சம்பளம் தருகின்றது என்ற நிலைக்கு வந்துவிட்டதாக அனைவரும் எண்ணத் தொடங்கிவிட்டனர். அந்த அலுவலகத்தை நிர்வகிக்க மூன்று பெண்களை பகலுக்கும், மூன்று ஆண்களை இரவுக்குமாகப் போட்டு, இருபத்தி நான்கு மணி நேரமும் சேவை செய்ய ஆரம்பித்துவிட்டனர். இரவு நேரப் பணிகளுக்குத் தனிக் கட்டணம் போட்டு வசூலித்துவிட்டனர். எந்தப் பணிக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள், அலுவலக எண்கள் மட்டுமே. அச்சடித்த புத்தகத்தில் அலுவலக தொலைபேசி எண் மட்டும்தான் இருக்கும். அலுவலகத்தில் அந்தப் பகுதியின் ஒட்டுமொத்த வரைபடம், அருகாமையில் உள்ள

கம்பெனியின் எலக்ட்ரீஷியன் கைபேசி எண்கள் இருக்கும். எனவே, கம்பெனி மட்டும் தான் எலக்ட்ரீஷியனை அழைக்க முடியும். புதிய வீடுகள் கட்டக்கூடியவர்கள் தங்கள் ஒப்பந்தக்காரர் மூலம் இவர்களிடம் தொடர்பு கொள்ள ஆரம்பித்தனர். அதே போல் பழைய வீடுகளில் உள்ள சிறு, சிறு வேலைகளுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டால், அடுத்த கணம் அவர்கள் வீட்டுக்குச் சென்று தங்கள் வீட்டின் வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, ரசீது கொடுத்து, பணம் பெற ஆரம்பித்தனர். எந்த வேலைக்கு எவ்வளவு என்று பட்டியல் உள்ளது. எனவே எந்தவித ஏமாற்றமும் வீட்டுக்காரருக்கும் இல்லை, மின் வேலை செய்கின்ற பணியாளர்களுக்கும் இல்லை. பட்டியலில் உள்ள தொகை மட்டும் தான் ரசீது கொடுத்து பெறப்படும். எனவே ஒட்டுமொத்த தொழில் முறையே மாறிவிட்டது. இந்த நண்பர்கள் தொழிலுக்குச் செல்லும் போது இப்போது புதிய கருவிகளைக் கொண்டு வேலை செய்து கொடுப்பது நேர்த்தியாக இருப்பதால் வீட்டுக்காரர்களுக்கு ஒரு மகிழ்ச்சி. எந்த வேலைக்கு எவ்வளவு கூலி தர வேண்டும் என்று முன்பே தெரிந்து இருப்பதால், வீட்டுக்காரர்களுக்கு நாம் சரியான கூலியைத்தான் தந்துள்ளோம் என்ற மனநிறைவு, வேலை செய்த நண்பர்களுக்கு ஏதோ கூலி வாங்குகின்றோம் என்ற உணர்வில்லாமல், நாம் செய்த வேலைக்கு நம் கம்பெனிக்கு வீட்டுக்காரர்கள் பணம் கட்டுகிறார்கள் என்ற உணர்வு. ஏனென்றால், இவர்கள் மாதந்தோறும் கம்பெனியில் தான் சம்பளம் பெறுகின்றனர். கம்பெனி என்பது அனைவரின் நிறுவனம். எனவே, கம்பெனியை அனைவரும் பாதுகாக்க முனைகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லாத் தொழிலாளிகளும் மேலை நாட்டில் தயாரிக்கப்பட்ட கருவிகளை உபயோகப்படுத்தி வேலை செய்ய கற்றுக் கொண்டது தான் இவர்களின் வருமானத்தைக் கூட்டியதற்கான காரணம். அடுத்து இவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிறுவனம் மூலமாக வேலை செய்வது என்பது இவர்களுக்குப் புதிய மரியாதையை ஏற்படுத்தியது.



மூன்றாவது, எங்குச் சென்று இவர்கள் வேலை செய்தாலும் வீட்டுக்காரரின் நிறைவுதான் அடிப்படை என்ற கோணத்தில் இந்தக் கருவிகளுடன் வேலை செய்து வீட்டுக்காரர்களைத் திருப்திப்படுத்துவது இவர்களின் வெற்றிக்கு அடுத்த காரணம். இரு நூற்றுக்கும் மேற்பட்ட இந்தத் தொழில்நுட்ப தொழிலாளர்களை ஒன்றிணைக்க கடினமாக உழைத்தார். அடுத்து, வீட்டுக்காரர்களிடம் எப்படித் தரமான வேலைகளை நிறுவனம் மட்டும்தான் செய்ய முடியும் என நம்ப வைக்கக் கடுமையாக உழைக்க வேண்டி இருந்தது. அடுத்து, என்ன வேலைக்கு என்ன கூலி என்பதை மிகப்பெரிய கள ஆய்வுக்குப் பிறகு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு நிர்ணயம் செய்தார். இந்தச் செயல்பாடுகளில் கீழ்க்கண்டவைகள் அனைவருக்கும் சாதகமானவைகள்:

ஒன்று, எல்லாத் தொழிலாளர்களும் முன்பைவிட கூடுதல் சம்பளம்; இரண்டு, தொழிலாளர்கள் மேற்கத்திய நுண்கருவிகள் கொண்டு நேர்த்தியாக பணிகள் செய்ய கற்றுக்கொண்டு தங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டனர்; மூன்று, தங்கள் செயல்பாடுகளில் தங்கள் திறமைகள் நிறுவனம் மூலம் மதிக்கப்படுவதை உணர்ந்து தங்கள் சுயமரியாதையை பாதுகாத்து உயர்த்திக் கொண்டனர்; நான்கு, தங்களுக்கென்று ஒரு நிறுவனம் கட்டி, அதன் மூலம் வீடு வாங்குவதற்கு, பைக் வாங்குவதற்கு, கருவிகள் வாங்குவதற்கு வங்கிகளில் கடன் வாங்கி முன்னேற்றச் செயல்பாடுகளில் ஈடுபட முனைந்துள்ளனர்; ஐந்து, வீடுகளில் பியுஸ் கேரியர் போட்டு, சிறு சிறு பணிகள் செய்து, பல நாட்களில் அந்த வேலையும் இல்லாமல் இருந்தவர்களுக்கு மாதச் சம்பளம் கிடைக்க ஆரம்பித்ததுடன், கூடுதல் சம்பளமும் கிடைக்கிறது, மரியாதையும் கிடைக்கிறது. புதிய பெரிய வீடுகளில், வணிக வளாகங்களில் புதிய வேலைகளில் ஈடுபடுவது அவர்களையே அவர்களால் நம்ப முடியவில்லை; ஆறு, இதுவரை ஆள் தேடி அலைந்து, அரைகுறை வேலை வாங்கி, கூலி கொடுக்கும் போது அவர்களுடன் தகராறு

செய்து களைத்துப்போன வீட்டுக்காரர்கள் தொலைபேசியில் பிரச்சனையைச் சொன்னால் உடன் வந்து வேலையை நேர்த்தியாய் செய்து, பட்டியலில் உள்ள கூலியை எந்தத் தகராறும் செய்யாமல் கொடுத்து நிறைவு பெறுகின்றனர். இதன் ஒட்டுமொத்த விளைவு, ஒரு தனி மனிதனின் சிந்தனையில் ஒரு அமைப்பு உருவானது, தொழிலாளர்கள் இணைக்கப்பட்டனர் அமைப்புரீதியாக, அவர்களின் நுட்பத்திறன் வளர்க்கப்பட்டு, சிறப்பான பணிபுரிய வாய்ப்பும் ஏற்படுத்தியது. இதன் பின்னணியில் ஒரு தனி மனிதனின் போராட்டம் நடந்துள்ளது. இதன் விளைவு, எல்லாருக்கும் நன்மை கிடைத்தது. இதைத்தான் "win win" எனக் கூறுகிறோம். எல்லோருக்கும் நன்மை, யாருக்கும் இழப்பில்லை. இதில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய செய்தி, முன்னேற்றத்திற்கு மாற்றுச் சிந்தனை தேவை, புதிய அமைப்புத் தேவை. அத்துடன், தொழில்நுட்பத்துடன் பணிகள் செய்யும் போது பணி மேன்மைப்பட ஆரம்பிக்கின்றது. ஒரு தனி மனிதனின் சிந்தனை எத்தனை பேருக்கு நன்மை பயக்கின்றது என்பதுதான் நாம் நிதர்சனமாகக் காணும் உண்மை. வெளிநாட்டில் பெற்ற வருமானத்தை நம் நாட்டிலேயே பெற முடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

*முற்றும்.*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***"நான் யார்?" என்பது முதற் கேள்வி.***

***முடிவான கேள்வியும் அதுவே.***

***தன்னையறியாதவனை உலகம் உருட்டிப் புரட்டும்.***



# Sri Aurobindo and the Tradition

## ஸ்ரீ அரவிந்தரும், மரபும்

*(ஏப்ரல் 2012 இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

11. **Tradition knows how to avoid evil.**
    ***Sri Aurobindo shows how evil can be transformed.***
    எவ்வாறு தீமையைத் தவிர்க்கலாம் என்பதை மரபு அறியும். எவ்வாறு தீமையைத் திருவுருமாற்றலாம் என்பதை ஸ்ரீ அரவிந்தர் காண்பிக்கிறார்.

12. **Tradition believes Mind – Brahma – has created the world.**
    **Sri Aurobindo explains Supermind has created the world.**
    மனம் - பிரம்மம் - உலகைப் படைத்தது என மரபு நம்புகிறது. சத்தியஜீவியம் உலகைப் படைத்தது என ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.

13. **Tradition knows the Absolute to be immutable.**
    **Sri Aurobindo says the Absolute is immutable as well as mutable.**
    மரபு பிரம்மத்தை மாற்றமற்றதாக அறிகிறது.
    ஸ்ரீ அரவிந்தர் பிரம்மம் மாறவும் கூடும், மாறாமலிருக்கவும் கூடும் என்கிறார்.

14. **Tradition believes the Absolute, being immutable, cannot be the source of determinism.**
    **Sri Aurobindo finds all determinisms in the Absolute.**
    பிரம்மம் மாற்றமற்றது என்பதால், அது நிர்ணயங்களின் மூலஸ்தானமாக இருக்க முடியாது என மரபு நம்புகிறது.

அனைத்து நிர்ணயங்களும் பிரம்மத்தில் உள்ளன என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.

15. **Absolute is different from the relative, says the tradition.**
**Sri Aurobindo lays down that the Absolute is the relative.**
அகண்டம் வேறு, கண்டம் வேறு என மரபு கூறுகிறது.
அகண்டமே கண்டம் என ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.

*தொடரும்....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***வாழ்வை அறிந்து நடத்துவது சைத்தியப் புருஷன்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***பகவானை நினைப்பது ஆன்ம விழிப்பு.***

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# சோதனைக்குரிய நேரம்

பிரச்சனை எழுந்தால், மனம் பிரச்சனையை விட்டு விலகி, அன்னையை மட்டும் நினைத்தால், பிரச்சனை சூரியனைக் கண்ட பனி போல் விலகும்.

அன்னையை நினைப்பது சிரமம். பிரச்சனையில்லாத பொழுது அன்னை நினைவு வாராது. பிரச்சனை இருந்தால் மனம் பிரச்சனையை மட்டும் நினைக்கும். பிரச்சனையை விட்டு விலகாது. அன்னை மறந்துவிடும். சுமார் 30 தரம் அன்னையை நேரில் தரிசனம் செய்தவருக்கு இதயம் கோளாறாகி உடலெல்லாம் வேர்த்து, துணியெல்லாம் நனைந்து, டாக்டரிடம் போய் உயிர் பிழைத்த 4ஆம் நாள், நண்பர் அவரிடம் அன்னையைப் பற்றிக் கேட்டபொழுது, அன்னை அதுவரை நினைவு வரவில்லையென்றார். அதுவே ஆன்மீக உண்மை. ஆபத்தாக அடிபட்டு கழுத்து எலும்பு முறிந்த ஆசிரம இளைஞன் ஆசிரமக் கட்டடத்திற்கு அடுத்த கட்டடத்தில் கிடக்கிறான். சாதகர்கள் கூடி அவனுக்குச் செய்யக்கூடியதெல்லாம் செய்த பின் டென்னீஸ் கோர்ட்டிலிருந்து வந்த அன்னை, அவர்கள் சமயோசித சேவையை மெச்சிவிட்டு **இதற்கு மேல் செய்வதற்கு ஒன்றுமில்லை. எவருக்கும் எனக்குக் கூறும் நினைவு வரவில்லையென்றார்**. B.P. இருப்பதால் முழு மயக்கம் தர முடியாமல் வயிறு ஆப்பரேஷன் செய்து, சொல்லொணா வலிபடுபவர் அன்னையைத் தவறாமல் தரிசனம் செய்தவர். அவருக்கு வலி தெரிகிறது. அன்னை நினைவு வரவில்லை. இந்த நேரம் அன்னை என்ற வெறும் சொல்லும், 'எரிவதை இழுத்தால் கொதிப்பது அடங்கும்' என்பது போல் க்ஷணத்தில் வலி குறைய ஆரம்பிக்கும். அதை எடுத்துக் கூறிய பொழுது,

*"என்னைச் சும்மா விடுங்கள், வலி பொறுக்க முடியவில்லை. இதெல்லாம் என்னால் முடியாது" என மறுத்துவிட்டார்.*

✦ **அன்னை நினைவு வாராது**
*என்பதே அன்பர்கள் அனுபவம்.*

இந்த நிலையில் வலியாலோ, மகத்தான பிரச்சனையாலோ, ஆபத்தாலோ, மாபெரும் வாய்ப்பாலோ திணறுபவர் செய்யக் கூடியது உண்டா? அவருக்குச் சொல்லக் கூடியது உண்டா?

✦ **உண்டு.**
**இல்லையென்பது இல்லாதது**
**அன்னை லோகம்.**

ஒரு முறையும் அன்னையை அழைக்க முடியாத நேரம், அழைக்க முழு முடிவு செய்து முழுத் தோல்வி பெற்றாலும், அந்த முடிவு நிலையை மாற்றிக் காப்பாற்றும். நினைவு வரும், பிரச்சனை தீரும். அன்னையுடன் நெருங்கிய முழுத் தொடர்பிருந்தும் அவருக்கு நினைவே வராவிட்டால் உடன் உள்ளவர் அவருக்கே சொந்தமான நினைவு வரும்வரை அவர் சார்பாக அன்னையை அழைக்க வேண்டும்.

***ஏதாவது ஒருவகையில் தொடர்புள்ளவரை அன்னை கைவிடமாட்டார். தொடர்பேயில்லாவிட்டாலும் அன்னை மெதுவாக லேசாகத் தொடர்பை ஏற்படுத்துவார். நாம் விலக்கக் கூடாது.***

❀❀❀

# விரதத்தைக் கடந்த அன்பு

அன்பு எனில் பாசம் என நாம் கொள்வோம். உடல் வேகத்தால் எழும் உணர்வு பாசம். தாய்க்குப் பிள்ளை மீதுள்ள பாசம். அன்பில்லாத தாயாருக்கும் பாசமிருப்பதுண்டு. சோதனைக்குரிய நேரம் எழுந்து, சோதனையில் வெல்பவருண்டு. அவர்கள் மன உறுதியால் வெல்பவர்கள். எப்படி வென்றாலும் சோதனையில் ஜெயிப்பது பெரியது. மன உறுதி விரதம். மோட்சத்தை நாடுபவர்க்குரியது விரதம். திருவுருமாற்றத்தை நாடுபவர்க்கு விரதத்தைவிட அன்பு உரியது. தன் சொத்தையெல்லாம் எடுத்துக்கொண்டுபோன உடன் பிறந்தவனை மன்னிக்கும் மனம் உள்ளவரும் உண்டு. அவனுக்கு மன்னிப்பு தேவைப்பட்ட பொழுது அவன் செய்த கொடுமையை ஒதுக்கி வைத்துவிட்டு, கடமையைக் கருதி அவனுக்கு உதவும் உத்தமர் உண்டு. அது மன உறுதி, விரதம். தன்னைக் கைவிட்டு அடுத்தவளை நாடிய கணவனை மன்னிக்க மனம் வாராது. உதவி பெற்று, உயிர் பெற்றெழுந்த நண்பர் அதே நேரம் மெய்யைப் பொய்யாக்கி ஆபத்தும், அவதூறும் ஏற்படுத்தினால், அவனை மன்னித்து உதவும் நேரம் வந்தால், அவன் கூறிய இரகஸ்யத்தை வெளியிடாமல் அவனைக் காப்பாற்ற முன்வரும் மனம் மனித நிலையைக் கடந்த இதயம். அந்த விரதம் அவருக்கு மோட்சம் தரும். அது பெரியது.

**பெரியதைக் கடந்த பெரியதுண்டு.**
*அது விரதத்தைக் கடந்த அன்பு.*

விரதம் சித்-சக்தியைச் சேர்ந்தது. சச்சிதானந்தத்தின் பகுதி. ஞானமும், விரதமும் மோட்சத்தைத் தரும். ஞான யோகம் ஞானத்தையும், கர்மயோகம் விரதத்தையும் கையாளும். ஆனந்தம் பக்தி யோகத்திற்குரியது. சத்திய ஜீவியம் சச்சிதானந்தத்தின் புறம். அது திருவுருமாறும். ஆனந்தம் இங்கு (delight) வளரும் ஆனந்தமாகும். அன்பு அதன் பகுதி. ஆனந்தம் ஆத்மாவை ஸ்பர்சித்தால் எழுவது அன்பு.

*எதிரியை மன்னிக்கலாம், உதவலாம், அவன் மீது பிரியம், அன்பு எழாது. அன்பை நினைத்தால் வெறுப்பு எழும். என்றாலும் அன்பு விரதத்தைவிட உயர்ந்தது.*

உயர்ந்தது என்றாலும், 'எனக்கு அவன் மீது அன்பு எழவில்லையே' என்பவர் என்ன செய்ய முடியும்? **துரோகம் செய்தவர் மீது அன்பு எழப் பிரார்த்தனை செய்தால் அதுவும் எழும்**.

✦ *நிலைமை மாறி எதிரி மனம் நெகிழ்ந்து*
*எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டு அன்பு*
*நெஞ்சில் ஒரு துளி சுரப்பது தெரியும்.*

***அந்த ஒரு துளி அன்பால் உலகத்தை - குறைந்தபட்சம் நம் உலகை - மாற்ற முடியும்.***

❀❀❀

Vol. II Issue 4 July 2012
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

**புதிய வெளியீடுகள்**

**ESSAYS ON ACCOMPLISHMENT** ரூ.150/-
N.Asokan

**கர்மயோகியின்**

**அன்னையின் ஆன்மீகப்பரிசு** ரூ.100/-

**லைப் டிவைன் - கருத்துகள்** ரூ.100/-

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
23/1, மேற்கு சாலை,
மேற்கு C.I.T. நகர்,
சென்னை - 600 035.
✆: (044)-24347191

Vol. II Issue 4 July 2012

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜூலை 2012